சிலம்பு-௧௭] பிரமாதி—ஆவணி [பரல்-௫

கலித்தொகையி லொரு கதை

[மகிழ்நன்]

நற்குடியிற் பிறந்து, நூல்கள் பல கற்றுத் தெளிந்து, எல்லோராலும் இனியனென்று ஏத்தப்பெற்ற ஒப்பிலான் எனுமோர் உயர்மகனிருந்தான். மலர்ந்த முகமும், குளிர்ந்த உளமும், கனிந்த சொல்லுமுடைய இவ்விளமகன், சான்றோர் புகழ, ஈன்றோர் மகிழ, ஊருக்கோர் அணிகலமாய்த் திகழ்ந்தான். இனிமைக்கொப்ப உறுதியும் அவனுக்கிருந்தது; அன்பிற்கொப்ப ஆண்மையும் அவனுக்கிருந்தது. நண்பராயில் அவர்பால் தோல்வியடையவு மிசைவான்; பகைவராயில் கூற்றுவனையு மெதிர்ப்பான். ஒருநாள் அவன் காட்டிற்புகுந்து வேட்டையாடச் சென்றனன்.

கதிரவனுக்குமுன் ஒப்பிலான் புறப்பட்டான். அவன் குளித்து வணங்கி அணிவன அணிந்து, தாய் தந்தையர் அடிமலர் தொழுது விடைபெற்று, முதுகில் அம்புப்புட்டிலைக் கட்டிக் கையில் வில்லை எடுத்துக்கொண்டு வெளியேறினான். விடியற்காலையில் வீசும் இளங்காற்று அவன்மேற்பட, அந்நுகர்ச்சியாற் பிறந்த உளவெழுச்சியுடன் ஒப்பிலான் நடந்து ஊரைக் கடந்தான். தூரத்திலுள்ள உயர்ந்த மலைமுடிகளில் ஞாயிற்றின் இளவொளி எழுதரிய எழிலுடன் விளங்கிற்று. கள்ளமிலா நெஞ்சமுங் கட்டிளமையுமுடைய ஒப்பிலான், இயற்கையாக உளத்திலெழுந்த ஒரு பண்ணை மிழற்றி வழிநடந்தான்.

பாதையருகிலிருந்த தோப்பொன்றிலிருந்தொரு குயில் கூவிற்று. வெண்தலைப் பருந்தொன்று ஓர் அரசமரத்திலமர்ந்து அங்குமிங்கும் பார்த்தது. பைங்காற் கொக்குகள் நீர்நிலைகளை நாடிப் பறந்து சென்றன. பனைமரத்திலிருந்து ஒன்றுக்

கொன்று அன்பு காட்டிய மணிப்புறுக்க ளிரண்டு ஒப்பிலான் வருவதைக் கண்டு இருக்கைவிட்டுப் பறந்தன. "புறவினமே, அஞ்சுவதேன்? எவருக்குந் தீங்கிழையா உங்களுக்கோ தீங்கிழைப்பேன்? வில்லுமம்பு மெடுத்தவனெல்லாம் பகைஞன், கொலைஞன் என்று நினைத்தீர்போலும்! குற்றம் உங்களதன்று. என்போற் பலர் இவ்வழியே வந்து உங்களினத்தைக் கொன்றதைப் பன்முறை பார்த்திருப்பீர். ஆதலின் என்னைக் கண்டு நெஞ்சு திடுக்கிட்டுப் பறந்தீர். உங்கள் நிலைகண்டு வருந்துகின்றேன்; இரங்குகின்றேன்," என்று தான் பாடிய பண்ணோடு கலந்து மொழிந்தான். இப்பொழுது சிறு புதர்கள் நிறைந்த காடு தொடங்கிற்று. இங்கு வல்விலங்குகளின் அடிக்குறிகள் உளவோவென்று ஒப்பிலான் ஆராயலானான்.

நிலத்தை நோக்கியவனாகச் சென்ற ஒப்பிலான்முன் எதிர்ப்பட்ட குறுநரியொன்று விரைந்தோடிப்போய் ஒரு பாறையின் பிறகே யொளித்துக்கொண்டு, அவன் போவதை மிக ஊன்றிக் கவனித்தது. நெடுஞ்செவியுஞ் சிவந்த கண்ணுமுடைய முயல்கள் பல குதித்தோடி மறைந்தன. இவற்றைப் பார்த்து நகைத்துக்கொண்டே சென்ற ஒப்பிலான், யானையினடி யொன்றைக் கண்டு "நன்று, நன்று; இஃதொரு பெரிய யானையினடி. அடியினளவை நோக்குங்கால், இது பத்தடிக்கு மேல் உயரமுள்ள களிறாயிருத்தல்வேண்டும். யானைகள் கூட்டமாகவே வாழும் இயல்பின. இங்கு வேறொரு யானையினடியையுங் காணோம். ஆதலின், இது தனியே திரியுமொரு சனியனே. தனியே திரியும் இத்தகைய யானைகள், மற்றவற்றைக் காட்டிலும் உரமும் பெருமிதமுமுடையனவாய்ப் பயிர்பச்சைகளை யழித்து மக்களையுந் தாக்குமென்று கேட்டிருக்கின்றேன். இதனடிக்குறியைத் தொடர்வேன்," என்று நினைந்தவனாய்க் கடுகி நடந்தான்.

யானை போனவழியைத் தொடர்ந்த ஒப்பிலான் மூங்கிற் புதர்கள் நிறைந்த ஒரு மலையடிவாரத்தை நெருங்கி, அங்கு மிங்கும் அலைந்து, கடுக்காய், வேங்கை, சந்தனம் முதலிய மரங்கள் வளர்ந்த மலைச்சாரலில் நுழைந்து, அடி தவறிடின் முப்பது முழங் கீழே விழவேண்டிய செங்குத்தான இடத்தைக் கடந்து, குறுமூச்சு வாங்கி, மலையினுச்சியை யடைந்து, அங்குள்ள ஒரு பாறையின்மேல் நின்று, கீழேயுள்ள பள்ளத்தாக்குகளையுஞ் சிற்றூர்களையுங் கண்டுமகிழ்ந்தான். கிழக்கே பகலோ னெழுந்து, உலகுவப்ப அலைகதிர் வீசினான். விண்ணில் அவனைச் சுற்றிநின்ற முகில் திரள்கள், அவன் பொன்னொளி

பட்டு மிளிர்ந்து, "புத்தேளிருலகு ஆண்டுளதுகொல்?" என்று காண்போர் வியக்குமாறு தோன்றின. அழகும் இனிமையும் யாண்டும் பெருகியிருப்பதை யுணர்ந்த ஒப்பிலான், யாவற்றையும் இயக்குகின்ற திருவருளை எண்ணி, உளமுருகிக் கண்ணீர் வடித்துப் பாடி யாடினன்.

இங்ஙனம் அவன் தன்னை மறந்து தனிமுதலிலாழ்ந்து பாடியாடுகையில் தோன்றினன் அங்கு தாடி வளர்த்த குறவன் ஒருவன். இளமகனது உடற்கட்டையும் ஒளிவிடு முகத்தையும், இதற்குமுன் காணுவொன்றைக் கண்டவன்போல் பார்த்து நின்றுன் அக்குறமகன். தன்னை மறந்தநிலை நீங்கிக் கீழே வைத்த வில்லை எடுத்துக்கொண்டு புறப்படும்பொழுது, புன்முறுவலுடன் நின்ற குறவனை ஒப்பிலான் கண்டான். "நேற்றிரவு யானையொன்று இவண் வந்து இடர்செய்ததுண்டோ? பெரியதொரு களிற்றின் அடி தொடர்ந்து யான் வருகின்றேன். அது பற்றி யாதும் நீ அறிவையோ?" என்று வினவினன் நன்மகன். "ஐயனே, குமரக் கடவுள்போல் என்முன் தோன்றும் இனியனே, நீ வினவுவதுபற்றி யானறிவேன். எனது தினைப்புனத்தை நான் நேற்றிரவு காவல் செய்யுங்கால், அங்கு வந்து புரளி செய்த யானையைத்தான் நீ தொடர்கின்றுயென்று நினைக்கிறேன். இருளிலே அதை நான் செவ்வையாகப் பார்க்காவிட்டாலும், வலியிலும் பருமனிலும் அது மற்ற யானைகளைவிட உயர்ந்ததென்பது திண்ணம். அது நடந்துவரும் ஓசை என் காதில் விழுந்தவுடன் யான் பரணிலேறிக் கவணிற் கல்லை வைத்து வீசினேன். கல்லடி பட்டவுடன் அஃது இடி இடித்தது போற் கூவிப் புனத்திற்புகுந்து, தினையை மிதித்தழித்துப் பரணின்மேல் நின்ற என்னைத் தாக்க வந்தது. அங்கிருந்து நான் தப்பியோடி வந்தது தம்பிரான் செயல் ஆயிற்று. நினைத்தாலும் உள்ளம் நடுங்குகின்றது. அதை நீ ஏன் தேடித் திரிந்து துன்புறப்போகின்றுய்? அவ்வெண்ணத்தை விடுதல் நன்று," என்றுன் தாடியோன்.

இதுகேட்ட ஒப்பிலான், "அவ் யானை பெரியதுங் கொடியதுமாயின், உன்னை வருத்தியவாறே பிறர்க்கும் இன்னல் விளைக்குமன்றே? அதனைப் பின்தொடர்ந்து செல்வதுங் கொல்வதுந் தகுதியேயாம். சிறிய, எளிய விலங்குகளை யழித்தற்கோ யான் வில்லைக் கொண்டுவந்தேனென்று நினைத்தாய்? எங்குளது உனது தினைப்புனம்? காட்டு," என்றனன். குறவன் அவனை நோக்கி, "உரங்கொண்ட உளமுனக்குளது. யான் கூறுவதைக் கேள். இதுபோன்ற யானையைத் தனியே சென்று கொல்லுதலாகாது; நண்பருடன் சென்று வேட்டை

யாடுதல் நன்று. இன்னுஞ் சிலநாள் பொறுத்து அதோ தெரி கின்ற ஊருக்கு வருவாயாயின், வெஞ்சினமுடைய அந்த யானையைக் கொல்வதற்கு யானும் என் ஊர்மக்களும் உன்னுடன் வருவோம். இது நினைத்தவுடன் முடிக்குங் காரிய மன்று. நான் சொல்வதற் கிசைகின்றாயா ?'' என உருக்கத் தோடு கேட்டான்.

குறவன் சொன்னதைப்பற்றி ஆழ்ந்து நினைந்து ஒப்பிலான், "என்பால் அன்புவைத்துப் பேசுகின்றாய். எண்ணியதை முடிக்காது திரும்ப யான் விரும்பவில்லை. நீயுரைத்த மொழியை இகழவும் என் மனம் இசையவில்லை. என் செய்வது ?'' என்று சிறுநகை தோன்றப் புகன்றான்.

"அழகிற்கேற்ற அன்புடையாய், அன்புக்கேற்ற அறிவுடையாய், இன்னும் ஓர் ஆண்டு கழியுமுன் திருமகளனைய ஒரு நன்மகளை நீ பெறுவாய். இது குறவன் சொல்லும் குறி'' என்று குறவன் இளமகனின் முகத்தை உற்றுநோக்கிக் கூறினான்.

"இஃதென்ன விந்தை! எடுத்ததை விடுத்து வேறொன்று புகன்றாய். மணம் வீசுமிவ்விடத்தே மணம் பற்றிய நினைவு வந்தது கொல் ?''

"கடவுள் தன்மை உன்னிலுளது. அஃது என்பாலுள்ள ஒரு தன்மையைத் தூண்டிற்று. அஃது இன்னும் என்னில் இயங்குகின்றது. நெடுநேரம் நில்லாது. கூறுவதைக் கேள். உன்னை மணக்கும் நங்கை நாள் செல்லச் செல்ல முன்னினும் பன்மடங்கு ஓங்கிய அன்புடன் உன்னைப் போற்றுவாள். குறிப்பறிந்தொழுகுவதில் இணையற்றவளாயிருப்பாள். மணம் நிகழும் நாளிலே யான் இன்று சொல்வதை நினை. எந்நாளும் உனக்கு நன்றாமே. கட்டிளமை நீங்கிய பின்னும், கரிய மயிர் நரைத்த பின்னும் ஒருவருக்கொருவர் இனியராயிருப்பீர். ''

"அன்ப, மணமென்ற நினைவை என்னில் எழுப்பி நன்மொழி நனி பகர்ந்தாய். எனது நன்றியை ஏற்றுக்கொள். நின் வாய்மொழி வாய்ப்பதாக.''

"வாய்க்கும். ஐயத்திற்கிடமில்லை. ஐயனே, உன்னைக் கண்டதால் யான்பெற்ற மகிழ்ச்சி நிறைவுபெற ஒன்று நீ செய்யவேண்டும். ஒரு நாழிகை பொறுப்பாயாயின், காட்டிற்குள் நுழைந்து தேனும் பலாப்பழமுங் கொண்டுவருவேன். என்னுடனிருந்து உண்டுபோகவேண்டும்'' என்று குறவன் கூறியதற்கு ஒப்பிலான் இணங்கினான்.

அருகிலிருந்த ஒரு சுனையிற்போய்க் கைகால்களைக் கழுவிக் கொண்டுவந்து ஒப்பிலான் ஒரு மரத்தடியில், தன் வல முழங் கையை நிலத்திலூன்றித் தலையைத் தாங்கிக்கொண்டு படுத் தான். குறித்த ஒரு நாழிகை கழியுமுன் கொம்புத்தேனும் பலாச்சுளையுந் தேக்கிலையிற் கொண்டுவந்தான் குறவன். இரு வரும் அமர்ந்து உண்ணலானார்கள். முதலில் அவர்கள், வெஞ் சினமுடைய யானையைக்கொல்ல ஒரு நாளைக் குறித்துக்கொண் டார்கள். பிறகு ஒப்பிலான், "யானைகள் கூட்டமாக வாழ் வதுதானே இயல்பு. தனியே ஒன்று பிரிந்துவாழக் காரண மென்ன?" என்று கேட்டான்.

"காரணம் சொல்லுகிறேன். ஒரு யானைக்கூட்டத்திற் களிறுகளும் பிடிகளுமிருக்கும். இவற்றிற்கெல்லாந் தலைமை தாங்கிக் கூட்டத்தை யாள்கின்ற பெரிய ஆண்யானை ஒன்றிருக் கும். எல்லா யானைகளும் அதற்கடங்கி நடக்கவேண்டும். சில வேளைகளில் கூட்டத்திலுள்ள ஆண் யானைகளிலொன்று ஆண்மை மிகுந்து தலைமை தாங்கும் யானையை எதிர்க்கும். இரண்டிற்கும் பெரும்போர் நிகழும். போரில் தலைமை தாங் கும் யானை தோற்றால், அதை வென்ற களிறு தலைமையைப் பெறும். தலைமை தாங்கும் யானை வென்றால், அது தோற்ற களிற்றைக் கூட்டத்தைவிட்டு ஓட்டிவிடும். இங்ஙனம் வெருட்டி யடிக்கப்பெற்ற யானைதான் தனியனாய்த் திரிந்து தொல்லை கொடுப்பது," என்றான் இளமகனுடன் நட்புக்கொண்ட முது மகனாகிய குறவன்.

"இத்தகைய யானையைத்தான் 'இனம்பிரி யொருத்தல்' (பாலைக்கலி, 21: வரி 2.) என்று நூலோர் கூறினர்போலும். தலைமை தாங்கும் யானை ஆட்சி செலுத்தும் வகையை நீ பார்த்துளாயோ?"

"பார்த்துளேன். எதிர்பாரா இடர்வந்த காலத்தில் அது தன் திறமையைக் காட்டும். பார்த்தவற்றில் ஒன்றிரண்டு கூறுகிறேன்."

(தொடரும்)

உழைப்பு

[போளூர் திரு. ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை.]

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென
நமக்குரைத் தோரும் தாமே
அழாஅல்தோழி அவர் அழுங்குவர் செலவே"

—குறுந்தொகை: 135

நற்குணமும் நற்செய்கையும் சிறந்த நங்கையொருத்தி, அறிவும் ஆண்மையும் பெருகிய தோன்றல் ஒருவனை மணந்து இல்லறம் பூண்டு ஒழுகி வந்தனள். ஒருநாள் அவன், தான் செய்வதற்குரிய வினையொன்று குறித்துத் தன் மனையின் நீங்கிச் செல்லவேண்டியவனானான். மணந்தநாள் தொட்டுத் தன் கணவனைப் பிரிந்தறியாத அந்நங்கைக்கு இது தெரியின், அவள் பெருவருத்தம் எய்துவள் என்பதை அத்தோன்றல் எண்ணினன். உண்மைக் காதல்வழி யொழுகுவார்க்குப் பிரிவுபோலப் பெருந்துன்பம் தருவது பிறிது கிடையாது. "இன்னாது இனனில்லூர் வாழ்தல், அதனினும் இன்னாது இனியார்ப் பிரிவு" என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார். அதனால் தன் கருத்தினை, அவன், அவளது தோழிக்கு உரைத்து, பின்னர் மெல்லத் தன் மனையாட்குத் தெரிவிக்குமாறு பணித்தான். அவளும் அதற்கு ஒருவாறு உடன்பட்டு, காலம் வாய்த்த போது அவனது கருத்தினைப் பையவுணர்த்தினாள். கேட்டாளோ இல்லையோ, நங்கைக்குப் பெருந்துயர் உண்டாகிவிட்டது; கண்ணீர் விட்டுக் கதறியழத் தொடங்கினாள். அவளை ஆற்றுவிக்கத் தொடங்கிய தோழி, "நங்காய், கணவன் சொல்லைக் காப்பது மனைவிக்குக் கடன். அவர் ஒருநாள் சொன்னது ஒன்றுண்டு. அது நினக்கும் தெரிந்ததே. அஃதாவது: 'ஆடவர்க்குத் தாங்கள் செய்யும் வினையே உயிர்; மனையுறையும் மகளிர்க்கு அவ்வாடவரே உயிர். அவர்க்கு உயிராகிய வினைமேற் சென்றால்தானே, அவர் நினக்கு உயிராக இருத்தல்கூடும்; நீ அழுதால் அவர் வினைமேற்செல்வதைக் கைவிடுவரே. அதனால் ஏதமன்றோ விளையும்," என்றனள். அது கேட்ட அந்நங்கையும் தேறி அவன் பிரிவை ஆற்றித் தனக்குரிய அறத்தினையும் ஆற்றிவந்தனள்.

இச்சிறிய பாட்டினைப் பாடியவர் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் சான்றோராவர்.

இவ்வாறு வினைமேற்செல்ல நினைந்த தலைமகன் ஒருநாள் மாலைப்போது வரக்கண்டு, "ஆ, இப்போது நம் காதலி நம் மனையகத்து விளக்கேற்றி அதன் முன் நின்று, 'இன்னும் காதலர் வந்திலரே' என்று நினைக்கும் போது அன்றோ?" என்று தனக்குள் நினைத்தான். நினைத்தவன், இம்மாலை,

"உள்ளினேன் அல்லனே யானே, உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்
மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே"

—நற்றிணை: 3

எனத் தனக்குள் நினைந்து இனைந்தான் என இளங்கீரனார் கூறியுள்ளார். இவ்விரு செய்யுட்களையும் நோக்குவோமாயின், நமக்கு ஓர் உண்மை புலப்படும். அஃதாவது, ஓர் ஆண் மகனுக்கு அவன் செய்தற்குரிய வினைதான் உயிர்; அதனை முடித்தவழி யுளதாகும் இன்பம் காதலின்பம் போல்வது என்பதாம்.

வினையென்பது நாம் செய்யும் செய்கையாகும். ஒவ்வோருயிரும் உலகில் தோன்றும்போதே வினை செய்வதற்கென்றே பிறக்கின்றது. வினையே ஒருவன் எய்தும் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் காரணமாவது. இன்பத்தையே எவ்வுயிரும் பெற விரும்பும்; துன்பத்தை விரும்பும் உயிர் எதுவுமில்லை துன்பம் என்ற சொல்லைக் கேட்கும்போதே நம் உள்ளம் சுளிக்கும்; சொல்லுதற்கும் நாக்குக் கூசும். இன்பத்தைத் தரும் வினையே யாவரும் விரும்பும் தொழிலாகும். அதனால்தான் இன்பம் தரக்கூடியதனை நல்வினை, நற்செய்கை என்றும், துன்பம் தருவதனைத் தீவினை, தீச்செய்கை என்றும் சொல்லுகின்றோம்.

இனி இவ்வினையைச் செய்யும்பொழுது நம் உடலும் உயிரும் பெரிதும் பாடுபடுகின்றன. இவ்விரண்டும் ஒருங்கேகூடிச் செய்யாதவழி, எந்தத்தொழிலும் நடைபெறுவது இல்லை. எத்தொழிலைச் செய்வதாயினும் இவை உழைக்கவேண்டியிருக்கின்றன. உயிர் உடலொடு கூடியிருப்பது இவ்வுழைப்புக்கே; இவ்வுழைப்பால், உயிர் உடல்படும் துன்பமனைத்தையும் தான் படுகிறதென்றாலும், உயிர்க்கு உடலின்மேல் உள்ள பற்றினால் உழைக்க உழைக்க, அதற்கு அதன்மேல் பற்று மிகுகின்றது; "துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்" எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். எனவே, உடலோடு கூடி வாழும் ஒவ்வோருயிர்க்கும் உழைப்பு இயல்பாக அமைந்திருப்பதை அறிகிறோம். ஆனால் இவ்வுயிர்களுள் மக்களுயிர்மட்டில், ஏனை உயிர்களைவிடச் சிறிது மேம்பட்டதாகும். தன் உழைப்பால் ஆண்டவன் படைப்பில் உள்ள ஏனை உயிர்களையும் உயிரில் பொருள்

களையும் முறையே அடிமையாகவும் உடைமையாகவும் ஆக்கிக் கொள்ளற்கு வேண்டிய உரிமை மக்களுயிர் பெற்றிருக்கிறது. ஆதலாற்றான் இன்று மனிதன் நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய பூதம் ஐந்தும் தான் விரும்புமாறு அமையச் செய்கின்றான் நிலத்திற்குள் நுழைந்து குடைந்து செல்கின்றான்; நீரின் மேலும் கீழும் நிமிர்ந்து செல்கின்றான்; காற்றை ஏவல் கொள்ளுகின்றான்; விசும்பில் பறந்தேகுகின்றான். சுருங்கச் சொன்னால், மனிதன் ஆண்டவனுக்கு அடுத்தபடியாக விளங்குகின்றான் என்னலாம்.

மனிதன் இத்துணை ஏற்றமுடையவனாக இருத்தற்குரிய உரிமை அவன்பால் நிலைத்திருக்க வேண்டுமாயின், அவன் சலிப்பின்றி உழைத்தல் வேண்டும். உழைப்பினால் அவன் உடல் தூய்மையடைகிறது. அதனால் அவன் உள்ளம் ஒளிபெறுகிறது; அப்போது ஆண்டவன் அவற்கு அருளியுள்ள உரிமை கதிர்விட்டுத் திகழ்கின்றது. அதுவழியாக அவன்பால் உயரிய எண்ணங்களும், உலவாத இன்பமும் உண்டாகின்றன. மக்களுட் சிலர், அவ்வுரிமையைக் காத்துக்கொள்ளும் வலிகுன்றியிருக்கின்றனர்; உரிமையை நிலைப்பிக்கும் உழைப்பினை நெகிழ்த்துச் சோம்பலுறுகின்றனர். சோம்பல் உடலைக் கெடுக்கின்றது; அதனால் உயிர் மடங்குகின்றது; உரிமை நிலவும் உள்ளம் மடிகின்றது ஆகவே, சோம்பல் மடிமைக்கு உயிரை இரையாக்கி, உள்ளத்தே இருளையும், உயிர்க்கு இறுதியையும் விளைவிக்கின்றது. ஒரு பெரியாரது உடன்பிறந்தார் இறந்துபோனார் என்பது கேள்வியுற்று, வேறொரு பெரியார் அவரை நோக்கித் "தங்கள் தம்பி எவ்வாறு இறந்தார்?" என்று கேட்டதற்கு, அவர், "அவன் உழைத்தற்கு இன்றி இறந்தான்" என்றாராம். ஆகவே, உழைப்பின்றிச் சோம்பியிருப்பவன், விரைவில் தன் உயிரை இழக்கின்றான்; அவன் உள்ளத்தே, உயிர்க்குத் தீங்கு செய்யும் தீய எண்ணங்களும் அறியாமையுமே குடிகொள்ளும் என அறியலாம்.

இன்று நாம் அழகிய நகரங்களையும், பெரிய பெரிய மாடமாளிகைகளையும், பசும் கம்பளம் விரித்ததுபோலத் தோன்றும் பரந்த பண்பட்ட வயல்களையும் காண்கின்றோம். காடழிந்து நாடாகியிருக்கிறது; கருங்கடலில் பெருங்கலம் செல்கின்றது; கம்பியின்றியே தந்தி பேசுகிறது; விரைவில், "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என நம் நாவரசர் பாடியதை நாமும் பாடப்போகின்றோம். இவையாவும் உழைப்பின் பயனன்றோ! "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?"

எனப் பட்டினத்தடிகள் உரைத்தது உண்மைமொழியன்றோ! உழைப்பின்றி உடல் சோம்பி, உயிர் ஓய்ந்து ஒடுங்கியிருக்கும் ஒருவனைப் பாருங்கள்! அவன் உள்ளத்தில் ஒளியில்லை. அதனை அவலம், கவலை, கையாறு, அழுங்கல், ஆசை, வெகுளி, அழுக்காறு முதலியன சூழ்ந்து அரிக்கின்றன; அவனும் உருக் குலைந்துமெலிகின்றான். அவனை ஏதேனும் ஒருதொழிலைச்செய்ய விடுவோம்: உடனே, அவனது உடலும் உயிரும் ஒருப்பட்டு அத்தொழிற்கண் உழைக்கத் தொடங்குகின்றன. அவன் வன்மை முழுதும் அத்தொழிலை முடித்தற்கண் ஒன்றிவிடு கின்றது. அவன் உள்ளத்தை யலைத்த அழுக்குணர்வுகளனைத் தும் அகலப்போய் எங்கேயோ மறைந்துபோகின்றன. அவன் மனிதன், மனிதனாக வயங்குகின்றான். அவனது உள்ளம் பேரொளி விட்டு மிளிர்கின்றது; அவ்வழுக்குணர்வுகள் அவ் வொளியின்கண் புகைந்து எரிந்து பொசுங்கி; தொலைந்து புத்தொளி செய்கின்றன. ஆகவே, ஒருவனது உள்ளத்தைத் தூய்மை செய்வதற்கு உழைப்பே சிறந்த மருந்தாக இருக்கிறதென்பது எளிதில் விளங்குகிறது.

நாம் வாழும் இம்மண்ணுலகு ஆதியில் ஞாயிற்றிலிருந்து போந்தது என்றும், அன்றுமுதல் இன்று வரையில் சுழன்று கொண்டேயிருக்கிறது என்றும் நாம் அறிந்திருக்கின்றோம். இதனை இவ்வாறு சுழல்வித்த பரமன் கருத்து யாதாகல்வேண் டும்? இடையறாது சுழலும் சுழற்சியினால் நாம் வாழும் மண் ணுலகு, விண்ணுலகில் வட்டமாக இயன்று, பல விகார உரு வங்களைப்பெற்று, முடிவில், இற்றைய உருண்டை வடிவத்தைப் பெற்றிருக்கிறது. சுழலாது நின்றுபோமாயின், இந்நிலவுல கம் யாதாய் முடியும்? ஒருசார் பகலும் மற்றைய பகுதி இரு ளுமாய் எவ்வுயிரும் வாழ்தற்கின்றி, எப்பொருளும் நிலைபெறுவ தின்றிக் கெட்டழியுமென்பதனைச் சொல்லவும் வேண்டுமோ! அளித்தக்க இம்மண்ணகம், இடையறவின்றிச் சுழன்றுழலும் உழைப்பினால்தான் இதன்பால் முறை திரும்புதலும், நேர்மை கோடுதலும் பிற தீமைகளும் இலவாயின; விகாரங்கள் நீங்கிச் சீரிய இவ்வுருவமும் அமைவதாயிற்று.

குலாலனது உழைப்பும், அவனது தண்ட சக்கரமும் மனி தன் உணவட்டு உண்ணத்தொடங்கிய நாண்முதல் அறிந்தனவா கும். சமய நூல்களும் இலக்கண நூல்களும், அவனையும் அவன் செய்யும் வினையையும், வினைக்குரிய கருவி கரணங்களையும் அடிக்கடி எடுத்துக்காட்டித் தம் அறிவுப் பொருளை வழங்கு கின்றன. அச்சக்கரத்தின் நடுவில் வைக்கப்படும் மண்திரளைப்

பாருங்கள்! அதனிடத்தில் ஏதேனும் பாண்டவமைப்புக்குரிய வடிவமுளதோ? அழகிய உருவமும் திருந்திய வடிவமு முடைய மட்கலங்கள் அச்சக்கரத்தின் சுழற்சியால் பிறக்கின் றன. அஃது இல்லையாயின் அக்குலாலன் மட்கலன்களை யாக் குதல் கூடுமோ? எத்துணைத் தொழிற்சிறப்பும், உலையா வுழைப்புமுடையனாயினும் அவன் யாதுசெய்யமுடியும்? அவன் செய்ய முயலும் கலங்கட்கு அழகும் வடிவும் அமையுங்கொல்! இயற்கையுலகும், சக்கரத்துணையில்லாத குலாலனைப்போல, ஓய்ந்து ஒடுங்கி நிற்குமாயின் அதன் பயன் என்னாய் முடியும்! அவ்வாறு செய்யாது சலிப்பின்றி, உழைக்குமாறு அருளிய ஆண்டவனை எப்போதும் வணங்குவோமாக. உழைத்தலின் றிச் சோம்பிக் கிடக்கும் ஒருவன் எத்துணைப் பொருணலங்கள் உடையனாயினும், அவற்கு அவை ஒரு பயனையும் செய்யா. கடசக்கரமின்றிக் கையற்று நிற்கும் குலாலன்பால் உள்ள மண்திரள் போல, உழைப்புச் சிறப்பில்லாத ஒருவனும் வெறுந் தசைப் பொதியும் சிறப்பில் பிண்டமுமாவதல்லது பிறிதில்லை. குலாலனை மகனாகவும், அவனது சக்கரத்தை உழைப்பாகவும் கொண்டு நோக்குக. உழைப்பு உயர்வு தரும்; உழைப்பாளி உலகாள்வான். ஆகவே, உழைப்புப் பெற்றவன் உறுதிபெற் றவனாகின்றான். உயிர் வாழ்க்கையின் உறுதிப்பயன் அவன் பாலேயுளது. உயர்வு வேண்டுவோன் உழைப்பு வேண்டுக. கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கைகலந்து கலித்தோடு கின்றன. இடைப்பட்ட மாண்பொருளை வரன்றி யேகும் உழைப்பு வன்மையால் அவை கலித்துச் செருக்குகின்றன. அழுக்கும், மாசும், குப்பையும், கூளமும் அவற்றின் நெறியிற் பட்டு அலைத்துக்கொண் டேகப்படுகின்றன. கால்காலாய் வய லிடைப்படிந்து உரமாகித் தாம் பரவும் நிலப்பரப்பைப் பசும் புல்லும், நறுமலரும் கண்கவர் வனப்புமுடைய வண்பொழி லாக்கும் சிற்றாறுகளின் மாண்டொழிலை என்னென்பது! அவற் றின் தெண்ணீர் உண்ணீராகிறது. அது சுமந்து கொணர்ந்த அழுக்குகளும் அவற்றோரன்ன மாசுகளும் மாய்ந்து போகின் றன. இதனாலன்றோ, "உணவெனப் படுவது நிலத்தொடு நீரே; நீரும் நிலனும் புணரியோர், ஈண்டு, உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" எனக் குடபுலவியனாரும் பாண்டியன் நெடுஞ்செழியற்குப் பாடியறிவுறுத்தினர். இத்தகைய நீர் யாறே உழைப்பெனவறிக.

(தொடரும்)

கடவுள் வழிபாடு (புறப்புறம்)

[வித்துவான் மறை. திருநாவுக்கரசு]

கடவுள் வழிபாடு என்னும் இக்கட்டுரையானது கடவுள் ஒருவர் இருக்கின்றார், அவருக்கு அருள் வடிவம் உண்டு, அவரை வழிபடுதல் வேண்டும் என்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டு எழுதப்படுவதாகும்.

மெய்யறிவு பெற்ற ஞானிகள் கருவிகரணங்களையெல்லாம் ஒழித்துக் கண்மூடி அகமுகமாகக் கடவுளை வணங்குவது அக வழிபாடு எனவும், உலகப்பொதுமக்கள் மனமொழி மெய்கள் (மனோ வாக்குக் காயங்கள்) கொண்டு திருவுருவத்தில் ஆண்டவனை வணங்குவது புறப்புற வழிபாடு எனவும், மானிடர் உயிர் தோறும் இறைவன் நிறைந்திருக்கின்றார் என்று அறிந்து அவர்கள் நன்மைக்காக ஆன்றோர் செய்யும் தொண்டு புறவழி பாடு எனவும், மானிடர்க்கு மட்டுமன்றி மற்ற உயிர் உள்ள அசையும் அசையாப்பொருள் யாவற்றிற்கும் அருள்பெற்ற ஆசிரியர்கள் செய்யும் தொண்டு அகப்புறவழிபாடு எனவும் பிரித்துக்கொள்ளலாம்.

இவற்றில் அகவழிபாட்டை விளக்கும் ஆற்றல் மெய்யறிவு பெற்ற திருமூலர் போன்ற ஞானிகட்கே உரியதாகும். இங்கே எழுத எடுத்துக்கொண்டது புறப்புற வழிபாடாகும். ஊன்றி நோக்கினால் நான்கு வகை வழிபாடும் ஒன்றை ஒன்று தொடர்ந்து நிற்றல் தெரியவரும், இனி அப்புறப்புற வழி பாட்டை எவ்வாறு செய்யவேண்டும் என்பது பற்றி இங்கு எழுதுவோம்.

கடவுள் "மனவாசகங் கடந்தோன்" என்றும், "கண் முதற்புலனால் காட்சியும் இல்லோன்" என்றுங் கூறப்படுவதால் அவரை மனமொழி மெய்களால் வழிபட முடியாதே என்று சிலர் கேட்கின்றனர். அவர்கள் கடவுள், "பத்தி வலையில் படு வோன்", "கருதுவார் இதயத்து ஊறும் தேன்", "அடியார்க் கெளியன்" என்று கூறும் ஆன்றோர்களின் அடைவுக் (அனு பவ) கருத்துக்களைக் காண்பார்களாக. இவற்றால் வானோர்க்கு அரிய சிவனை வழிபட மானிடர்க்குத் தேவையாயிருப்பது அன்பே என்பது தெளிவாக விளங்குகின்றதல்லவா? ஆதலின் அன்பே வழிபாட்டுக்கு அடிப்படை. அன்பைப் பெருக்கவே வழிபாடு ஏற்பட்டது. வழிபாடு மனவழிபாடு, மொழி வழிபாடு, மெய்வழிபாடு என்று மூன்று வகையாகக் கூறப்படு

கிறது. மனவழிபாடு நினைத்தல் (தியானம்) எனவும், மொழி வழிபாடு ஓதல் (தோத்திரம்) எனவும், கை கண் முதலிய கருவி களைக்கொண்டு உடம்பால் செய்யப்படும் மெய்வழிபாடு, செய்கை (கிரியை) எனவுங் கூறப்படும்.

இனி, நினைத்தல் வழிபாடு ஒன்றே சிறந்தது என்போர் ஓதல் வழிபாட்டை வீண் ஆரவாரமென்றும் செய்கை வழிபாடு பிறரை ஏமாற்றுவதற்கே என்றும் சொல்லுகின்றனர். ஓதல் வழிபாடே சிறந்தது என்போர் "உலகத்துன்பங்களில் உழல்கின்றவர்களுக்கு அமைதியாக ஓரிடத்திருந்து கடவுளை நினைத்திருக்கும் மனவழிபாடு எளிதில்வரா" தென்று கூறு கின்றனர். செய்கை வழிபாடே சிறந்தது என்போர், "நினைத் தல், ஓதல் வழிபாடுகள் கற்றவர்க்கே பயன்படு"மென்றும், "செய்கை வழிபாடு கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் பயன்படு மென்றுங்" கூறுவர். இவைகளில் நடு நிலையிலிருந்து சான் றோர் சொல்லும் அடைவின் பயனாய் அறிந்த அறிவுரை (உப தேசம்) களையுங்கொண்டு சிறந்த வழிபாடு யாது என்று காண வேண்டும்.

மாணவன் ஒருவன் தன் பெற்றோர்காண பள்ளிக்கூடச் செய்யுள் ஒன்றைப் பாடம் பண்ணுவதைப்போல நடிக்கின்றான். பெற்றோர் அகன்றதும் விளையாடுகின்றான். இதில் இவனது ஆரவாரமும் ஏமாற்றும் எண்ணமுமே கண்டிக்கப்பட வேண்டும். இப்படியல்லாமல் தன் பெற்றோர் முன் ஆரவார மும் ஏமாற்றும் எண்ணமும் இல்லாமல் உண்மையான எண் ணத்துடன் அவன் அச்செய்யுளைப் பாடஞ் செய்தால் அது தவறாகுமா? தவறாகாது.

அதுபோலவே ஆரவாரமும், ஏமாற்றும் எண்ணமும் இல்லாமல் ஒருவர் ஓதல்வழிபாட்டில் ஈடுபட்டுப் பொருள் உணர்ச்சி தெய்வ பக்தியுடன் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" ஓதுவாராஞல் அவ்வோதல் குறைகூறப்படுமா? படாது. இன்னும் ஒரன்பர் பிறரை ஏமாற்றுவதற் கென்றில்லாமல் மெய்யன்புடன் இறைவன் திருஉருவிற்கு நீராட்டிப் பூமாலே புனைந்தேத்திப் புகழ்ந்து பாடினால் அதைக் குறை கூற முடியுமா? முடியாது. பொதுவாக எல்லாச் சமயங்களிலும் இயக்கங்களிலும், அமைப்புகளிலும், அரசுகளிலும் தொழில் களிலும் நிலயங்களிலும் மெய்யரும் பொய்யரும் கலந்தே இருக் கின்றனர். பொய்யருக்காக அவைகளை எல்லாம் கூடாதென்று லும், இழித்தலும், பழித்தலும், அழித்தலும் முறையாகுமா? பொய்யருக்காக அவைகளை ஒழிப்பதாஞல் உலகம் ஏது?

போலிவழிபாடுகளை நம் ஆசிரியர்களே 'கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான்', 'பொக்கம்மிக்கவர் பூவும்நீரும் கண்டு—நக்கு நிற்பன் அவர்தமை நாணியே' (திருநாவுக்கரசர்); 'மெய்யனை மெய்யில் நின்று உணர்வானை மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம் பொய்யனை' (சுந்தரர்). 'பொய் வளர்ந்த நெஞ்சினர்கள் காணாத காட்சியே' (தாயுமானவர்) என்று மிகவும் கடுமையாகக் கண்டித்திருக்கின்றார்கள். இவற்றால் நினைப்பு வழிபாட்டில் மட்டுமல்ல யாவரும் ஓதல், செய்கை வழிபாடுகளிலும் பொய்ம்மையைக் கண்டிக்கலாமே யன்றி ஆரவாரத்திற்கும் ஏமாற்றத்திற்குமின்றி மெய்யன்புடன் வழிபாடுகள் செய்யப்படுமாறால் அவற்றைக் கண்டித்தல் ஆகாதென்று அறிந்தோம்.

இனி நல்ல படக்காட்சி யொன்றை ஒருவர் மணிக்கணக்காகக் கண்டு பெறும் இன்ப உணர்ச்சியைத் தனித்திருந்து சில கணங்கள் (நிமிஷங்கள்) அல்லாமல் மணிக்கணக்காக அவ்வின்ப உணர்ச்சியைத் தம் நினைப்பில் நிலைநிறுத்த இயலாதவராவர். இதுபோலத் திருவுருவிற்கு நீராட்டல், பூச்சூட்டல் தீபதூபங்காட்டல், போற்றல், ஓதல் முதலிய செய்கை வழிபாட்டினால் ஒருவர் மணிக்கணக்காகக் கடவுளிடம் தம் நினைவை நிலைக்கவைக்கலாம். வெறும் நினைப்பு வழிபாட்டில் சில கணங்களே அல்லாமல் மணிக்கணக்காகத் தம் நினைவைக் கடவுளிடத்தில் பதியவைக்கமுடியாது. நினைப்பு வழிபாடு இறைவனருள் பெற்றவர்க்கே கைகூடும். அன்றி உலகத்தில் பட்டு உழன்று பஞ்சாய்த் திரியும் பொதுமக்கட்கு ஆகாது, ஆகாது என்ற கூற்று உண்மையாதல் தெளிவு.

"செய்கை வழிபாட்டிற்குக் காலமும் கருவிகளும் (பொருட்கள்) கிடைக்காதே" என்பர் சிலர். உண்மை அன்பு அவர்க்கிருந்தால் அவை கிடைக்கும். திருவுருவ வழிபாடாகிய செய்கை வழிபாட்டிற்குப் பால், தயிர், தேன், நெய் முதலியனவே வேண்டுமென்பதில்லை. "புண்ணியஞ்செய்வார்க்குப் பூ உண்டு நீருண்டு". பூக்களில்லாவிட்டால் இறைவர்க்கு ஒரு பச்சிலை போதும். பொன் வெள்ளி செம்பு வடிவங்கள் வேண்டுமென்பது கட்டாயமல்ல. கல் மண் படவடிவங்களே போதும்.

இனி, ஓதல் வழிபாட்டிற்குரிய தேவாரம் திருவாய்மொழி முதலிய உயர்ந்த நடையிலுள்ள செய்யுட்கள் சிறிதேனும் கல்வி உடையவர்க்குத்தான் பயன்படும். திருவருட்பா, நந்தனார் கீர்த்தனைகள் முதலிய பாடல்கள் எழுத்தறிவுடைய

யாவர்க்கும் பெரிதும் பயன்படும். எனவே நினைப்பு வழிபாட்டைவிட ஓதல் வழிபாடு பலர்க்கும் நன்மை தரும்.

இனி, செய்கை வழிபாடு திருஉருவம் உடையதால் கற்றவர் கல்லாதவர், நாகரிகமற்றவர் யாவர்க்கும் பயன்படும். எப்படியென்றால், திருவுருவத்தைக் கண்ட உடனே அது நமக்கு எளிதில் விரைவாகக் கடவுள் உணர்ச்சியை உண்டு பண்ணுமாதலால் என்க. இதனால்தான் இறைவனை நேரே கண்டு பேரருள் பெற்ற மெய்யடியார்கள் யாவரும் செய்கை வழிபாட்டைப் பெரிதும் போற்றிக் கொண்டாடினார்கள். ‘பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார்’ (சம்பந்தர்). கொய்யாடு கூவிளங் கொன்றைமாலை கொண்டு அடியேன் நாளிட்டுக் கூறிநின்று (அப்பர்) “ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன் பூமாலை புனைந் தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்—கோமான் நின்திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்—சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே” (மணிவாசகர்).

சில ஆண்டுகட்குமுன் வாழ்ந்திருந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் பெரியார் இச்செய்கை வழிபாட்டினால் அம்மையின் அருள்பெற்ற வரலாற்றை உலகறியும். ஓதலும் நினைப்புமில்லா வெறுஞ்செய்கை வழிபாடு பயனற்றதாகும். எங்ஙனமெனில் உலகத் துன்பங்களில் சிக்குண்டுகிடந்த பொறி புலன்களை இறைவனிடத்தில் ஈடுபடுத்த மட்டுமே செய்கை வழிபாடு துணைசெய்யும். அவன்றன் அருள், இரக்கம், பெருமை, உயர்வு முதலியவற்றை எல்லாம் எடுத்து விளக்குவது ஓதல். அவ்வோதலில் பொருளுணர்ச்சியுடன் இறைவனை நினைவு கூறுவது நினைப்பு. எனவே, இச்செய்கை வழிபாடாகிய உடம்பிற்கு உயிர்போல் இருப்பது ஓதலும், அறிவுபோல் இருப்பது நினைப்புமாகும் என்னலாம். இம்மூவகை வழிபாடுகளும் ஒன்று சேர்ந்துதான் முழுவழிபாடு. இவற்றில் ஒன்று குறைந்தாலும் அது முழுவழிபாடு ஆகாது. இம்மூன்றுங் கலந்த வழிபாட்டின் இறுதியில் தோன்றுவது தன்னை மறந்த பேரின்பநிலை. சமாதி என்பது இதுபோலும். மனமொழிமெய்கள் மூன்றும் கலவாத வழிபாட்டால் அந்நிலை கிட்டாது. தேன் உண்கின்றொருவன் மாலைக்கண்ணால் பார்த்துப் பேய்க்கு அஞ்சினால் தேனின் சுவை இன்பஉணர்வை அவன் அறியாதது போல இவற்றால் கடவுள் வழிபாட்டின் பயனைப் பெறவிரும்புவார் இரண்டு கண்களும் ஒரே காலத்தில் இருபொருட்களைக் காணாது ஒரே பொருளைக் காண்பதுபோல, செய்கை, ஓதல்,

நினைப்பு ஆகிய மூன்றும் ஒன்றுகலந்த வழிபாட்டினாலேதான் கடவுளைக் காணல் வேண்டும். இதுவே உண்மையான கடவுள் வழிபாடாகும். இக்கருத்தைத் தான் சமய ஆசிரியர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். அதனைக் கீழ்க்காணும் திருவாசகச் செய்யுள் விளக்கும். அச்செய்யுளின் முதலிரண்டு அடிகளில் முறையே ஓதல், செய்கை, மனவழிபாடுகளை மணிவாசகப் பெருமான் கூறியிருப்பது உன்னிக்கத் தக்கது. இதனால் மனமொழி மெய்கள் மூன்றும் ஒருங்கொத்துச் செய்யப்படும் வழிபாடே முழு வழிபாடென்பதும், அவ்வழிபாடு செய்வார்க்கே கடவுள் பேரின்பப் பெருநலத்தைக் கொடுத்தருள் செய்வான் என்பதும் மணிவாசகப் பெருமான் கருத்தென்பதை நினைவில் வைக்கவேண்டும்.

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

இயற்கை இன்னிசை

காற்றின் உதவியின்றி நெருப்பின் உதவிகொண்டு இசையுண்டாக்கும் வழியை பிரெஞ்சு அறிவியலறிஞர் ஒருவர் புதிதாகக் கண்டு பிடித்துள்ளார். சிறு சிறு விளக்குகளின் உதவியைக்கொண்டு இசையை அவர் எழுப்புகின்றார்.

மலேய நாடுகளில் மூங்கிற்காடுகளில் புல்லாங்குழல் ஊதுவது போன்ற இசை எழும். சீன தேயத்திலுள்ள ஓராற்றின் இருகரைகளிலுமுள்ள கூழாங்கற்களின் மேல் நீர் விரைந்தோடும்போது இசை எழுகின்றது. ஸ்காட்லாந்தின் கடற்கரையோரங்களிலுள்ள மணல் மேல் நடந்துசென்றாலும், கொம்புகொண்டு தட்டினாலும் இசை எழுகின்றது. பண்டைக் கிரேக்கர்கள் நீரின் உதவியைக்கொண்டு பல வாச்சியங்களை வாசித்துவந்தனர்.

பெருந்துறை வரலாறு

[இராவ்சாகிப் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.]

சிவபுராண சரிதங்கள் பிறவிப் பிணிக்கு மருந்தாம் என்க. 'நோயற்ற வாழ்வே வாழ்வு' எனப் படித்திருக்கின்றோம். ஒரு முறை ஒரு பெரியாரிடம் 'ஐயா! என்னை மூலநோய் வருத்துகின்றது. அது தீருமாறு யாங்ஙனம்' என்றேன். அதற்கு அவர் "மூலநோய் தீர்ந்தால் மூலநோய் தீரும்" என்றார். தங்கள் விடையின் பொருள் விளங்க இல்லையே என்று அவரை யான் மீண்டுங்கேட்க "நோய்க்கு மூலம் உடல் (பிறவி). அவ்வுடற் பிணி (பிறவிப் பிணி) நீங்கின் மூலநோய் மட்டுமல்ல, மற்று எந்த நோயும் வாராது" என விளக்கினார். இக்கூற்றின் உண்மையை யார்தான் மறுக்கக்கூடும். ஆதலின் இறைவன் அருளால் அறிவோடுகூடிய நாம் இவ்வுடற்பிணிக்கு வேராகிய பிறவிப் பிணியை எவ்வாற்றானும் நீக்க முயலுதல் வேண்டும். மூர்த்தி தரிசனம், தலதரிசனம், தீர்த்தமாடல் என்னும் மூன்றும் பிறவிப் பிணிக்கு மருந்தாமென ஞான நிறைந்த பெரியோர் தெளிவுபடக் கூறியுள்ளார்கள்.

"திருந்திய நீறு பூசேன் சிவாலயங் கண்டு போற்றேன்
அருந்தவர் ஏவல் செய்யேன் அரகர என்று சொல்லேன்
பொருந்துபஃ றலங்கள் சென்று புண்ணிய தீர்த்தம் ஆடேன்
இருந்துடல் ஓம்பி வாழ்வேன் எங்ஙனம் உய்வேன் அந்தோ!"

எனவரும் உறையூர்ப் புராணச் செய்யுள் ஈண்டு உணர்தற் பாலது. மேற்கூறிய மும்மருந்துகளின் உண்மைத் திறனை உணர்ந்து யாவரும் உய்திபெறும் பொருட்டு அவ்வத் தலங்களுக்குரிய புராணங்களினின்றும் அமிர்தன்ன அருஞ்சுவைக் கதைகளை ஒவ்வொன்றாகச் **செந்தமிழ்ச் செல்வி** வாயிலாக வெளிப்படுத்த ஆசையுற்றேன். இறைவன் திருநாமத்தைப் போலத் தலங்களின் திருநாமங்களையும் இடைவிடாது சிந்தித்தலானும், உரைப்பதாலும் வரும் பயன் பெரிதே. திருஞான சம்பந்தப்பெருமானே "பிதற்றாய் பிறைசூடி தன் பேரிடமே", "எண்ணாய் இரவும் பகலும் இடும்பைக் கடல் நீந்தலாம் காரணமே", "விரும்பாய் அரும் பாவங்கள் தேய்ந்தறவே", "தஞ்சமென்றே நினைமின் தவமாம் மலமாயினதா னறுமே"— எனத் தலங்களின் பெருமையைப் பரவியுள்ளாரெனின் வேறு சான்றும் வேண்டுமோ? இம்முகவுரையுடன் இனித் தலங்களைப்பற்றிய சில கதைகளை நம் பிறவிப்பிணி நீங்க ஈண்டெழுதுவேன் :—

I. திருப்பெருந்துறை

(லுண்டாக்கன் கதை)

திருப்பெருந்துறை என்னுந் தலம் தஞ்சாவூர் ஜில்லா அறந்தாங்கி ரெயில்வே ஸ்டேஷனுக்கு 8 மைல் தூரத்தில் உள்ளது. தேவார வைப்பு ஸ்தலம். மாணிக்கவாசக சுவாமிகள் குருந்த மரத்தடியில் ஞானோபதேசம் பெற்ற தலம். இக்காரணத்தால் சிவபெருமானுக்குக் "குருந்த நீழற் குருமூர்த்தி" என்னும் ஒரு திருநாமமும் உண்டு. அருணகிரியாரும் "திருக்குருந்தடியமர் குருத்வ சங்கரர்" என்றார். 'திருவார் பெருந்துறை, சீரார் பெருந்துறை' என மணிவாசகப்பெருமானாலும், 'ஞானப்ரசங்கத் திருப்பெருந்துறை' 'குருந்தஞ் செறிதுறை' என அருணகிரிநாத சுவாமிகளாலும் பாராட்டப்பட்ட பழம்பதி இது. இத்தலத்துக்குச் 'சிவபுரம்' என்னும் பெயரும் உண்டு. கீழ் எழுதியுள்ள கதை இச்சிவபுரநகருக்குப் "பெருந்துறை" எனப் பெயர் வந்ததன் காரணத்தை விளக்குவதாகும்:

முன்னொரு காலத்தில் சந்திரகுலத்தனய சுகுணபாண்டியன் என்னும் அரசன் சிவபுரம் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் குருந்தமூலப் பெருமானுக்குப் பூசைப்பணியை வேதநெறி பிறழாவகையிற் செய்ய விரும்பி, கல்வி முதலிய சீர்கள் நிறைந்தவர்களான முந்நூறு மறையோர்களைக் காசித்தலத்தினின்றும் வருவித்தான். அவ்வேதியர்கள் குருந்தவனமாகிய சிவபுரத்தைச் சேர்ந்தவுடன் சுகுணபாண்டியன் அங்குச் சென்றனன். வந்த மறையோர் எல்லாம் அவனுக்கு ஆசி கூறினர். அவனும் அவர்களைத் தொழுது அவர்களுக்கு இருக்கை நல்கி ஒவ்வொருவருக்கும் உயர்ந்த கலிங்கம் (ஆடை) ஒவ்வொன்று சிறப்புறக் கொடுக்க எண்ணி, ஆடை ஒவ்வொன்றாகக் கொடுத்து வருகையில் இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது மறையோர்களே இருக்க, "இஃதென்ன விபரீதம், முந்நூறில் ஒன்று குறைபடுகின்றதே" என்று கவலுற்று வினவி வந்தவர்களைப் பலமுறை எண்ணியும் ஒன்று குறைவாகவே இருக்க, அம்மறையோர் அஞ்சி "அந்தோ! அரசே! எங்களுள் ஒருவர் காணோம். யாம் என் செய்வோம்" எனக்கூறி மயங்கினர். அரசனும் இன்னசெய்வதென்று அறியாது திகைத்தனன். இவ்வாறு வழுதியும் மறைவலாரும் மயங்கி மாழ்குறும்பொழுது மறைகளுக்கெட்டாத இறைவன் அதுபோழ்து குருந்தமரத்து அடியினின்று ஒரு மறையவன் உருக்கொடு தோன்றி "எம்மையும் சேர்த்து எண்ணுங்கள், நாம் இவர்

களை என்றும் விட்டுப்பிரியோம்'' எனக்கூறித் திருநீறெடுத்துப் பூழியன் (பாண்டியன்) நுதலிற் சாத்தி அவனுக்கு ஆசிகூறி அவன் கொடுத்த கலையை (ஆடையை)யும் ஏற்று அம்மூந் நூற்றுவருள் ஒருவராகத் தாமும் இருந்தார். அக்காரணத் தால் *ஆன்ம நாதராகிய எம்பெருமானுக்கு "மூந்நூற்றுவருள் ஒருவர்'' என்ற பெயர் போந்தது. தென்னர்கோமானும் இம் மறையோர் செய் அன்பையும் அவர்மாட்டு இறைவன் வைத் துள்ள அருளையும் வியந்துநின்று அவர் ஒவ்வொருவருக் கும் மாளிகை வெவ்வேருக அமைத்துத் தந்து அவ்வூரை யும் அவர்களுக்கு மானியமாக நல்கி இன்னும் அவர்களுக்கு வேண்டிய செல்வங்கள் யாவற்றையும் நிரப்பித் தனது நக ரடைந்தான். நிற்க, பின்னர் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறுவேம்.

ஆன்மநாதப் பெருமானை இம்மறையோர் அருச்சித்து ஏத்திவரும் நாளில் அவர்களுடைய பிள்ளைகளுக்கு வேத அத்தியயனம் செய்விப்பதற்குத்தக்க ஒரு பெரியார் இல்லையே என அவர்கள் கவலை கொண்டார்கள். "எவ்வளவோ புண்ணியம்செய்து ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதிக்கு என்ஞான்றும் பணிவிடை செய்யும் ஒரு பெரும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது. ஆனல் நம்முடைய குழந்தை களுக்கு வேதம் பயில்விக்கும் ஓர் உபாத்தியாயர் கிடைத் திலரே! என்செய்வேம், இறைவன் திருவருள் உணரேம்'' எனக்கூறிக் கவன்றனர். அப்பொழுது மாலயற்கரிய பெம் மான், சுடுவிடம் அமுதாக்கொண்ட கருணைவள்ளல் 'இம் மறையோர் தம் உள்ளத்தளர்ச்சியை யான் ஒழிப்பேன்' என்னும் திருவருட் பெருக்கத்தோடு தாமே ஓர் உபாத்தி யாயராய் வெளிவர எண்ணினர். உடனே, முதல்வர் எங்குள்ள அழகும் தம்மிடத்தே தங்கப்பெற்ற ஒரு கிழ வேதியர் உருக்கொண்டு, வெண்கோவணம், வெண்கலிங்கம் அரையிற்கட்டி, முப்புரிநூல் பொலிய, மேலாடை ஒன்றும் சாத்தி, நரைமுடி பின்நால (தொங்க), திருநீற்று உத்தூளனம் துலங்க, ருத்ராக்ஷமாலை அங்கமெலாம் இலங்க, செவியிற் செம் பொற்குண்டலம் திகழ, விரலில் பவுத்திரம் விளங்க, காலில் மிதி யடி சேர, கை குடைதாங்கத் தளர்நடையுடன் தண்டத்தையூன் றிக்கொண்டு, தமது வாய் "சிவ சிவ'' என்றூர்ப்பச் சிவபுரத்து வேதியர்தம் சபையின்முன்னுக வந்தார். இங்ஙனம் வந்த மறையோரை ஆண்டிருந்த வேதியர்கள் கண்டு அவர்முன்பு

* திருப்பெருந்துறை சுவாமி பெயர்—ஆன்மநாதர், ஆத்மநாதர்.

எழுந்து சென்று முகமலர்ச்சியுடன் இனிதுபோற்றி அவருக்கு ஆசனம் தந்து இருத்தி, "எந்த ஊர் இருந்தும் போந்தீர், ஐயரே! இயம்பும்" என்றூர்கள். அதற்கு அவர் "எங்கும் நாம் இருப்போம். எம் ஊர் என்று சொல்வதற்கு ஓர் ஊரும் இல்லை; ஆயினும் இச்சிவபுரத்தில் தங்குவோம், சிறுவர்களுக்கு நூல்கள் போதிக்க வல்லேம் யாம்" என்றூர். இதைக்கேட்ட அந்தணர்கள் யாவரும் மிக மகிழ்ந்து "சிறுவர்களுக்குப் போதிக்க வல்லீர் என்பது மெய்யாகில் நீர் வேதத்தைச் சற்று விளம்புவீர், கேட்போம்" என்றூர்கள். வந்த கிழ வேதியரும் யாவரும் அற்புதம் அற்புதம் என வியக்குமாறு சொல்ல வேண்டிய ஸ்வரம் சற்றுந் தவருது கார்மழை பொழிவது போல வேதத்தைப் பொழிந்தார். வேத முதல்வருக்கு வேதத்தை வாய்விட்டுரைப்பது ஓர் அரிய செயலாகுமோ! இதைக்கேட்ட மறையோர் சொல்லொணு உவகை பூத்தார். "எம் சிறுவர்களுக்கு நீரே இருந்து அத்தியயனம் செய்வித்தல் வேண்டும். அதற்காக உமக்கு என்ன தருதல்வேண்டும்?" என்றூர். உபாத்தியாயர் "உங்கள் அன்பு எம் மீதிருந்து எமது பசிக்கு நீங்கள் அன்னமிட்டால் போதும்" என்றூர். அதற்கு அந்தணர்கள் "ஐயரே! அப்படியானுல் எங்கள் வீடுகளில் தினம் ஒருவீடாக அமர்ந்து அமுது உண்ணலாம்" என்றூர்கள். உடனே கிழ வேதியரும் மறைச் சிறுவர்களைக்கூட்டி நல்ல தோரிடத்தமர்ந்து ஓதுவித்தலை நடத்தி வந்தார். பிள்ளைகளும் கல்வியில் நிகரற்ற விருத்தியடைந்து வந்தார்கள். மறையோர் உவகை பொங்கினர்.

இங்ஙனம் நிகழும் நாளில், வரதுங்க பாண்டியன் மகன் கௌமார பாண்டியன் மதுரையை ஆண்டுவந்தான். அவன் நட்பைப்பெற்று அவன்கீழ் "லுண்டாக்கன்" எனப் பெயரிய ஒரு (குறும்பன்) சிற்றரசன் இருந்தான். அச் சிற்றரசன் கொடிய நெஞ்சினன்; தீமை செய்வதற்கு அஞ்சாத வன். ஆன்மநாதருக்குப் பூஜைசெய்யும் இம்மறையோர்கள் அநுபவித்து வந்த பூமிகளைக் கவர எண்ணங்கொண்டு பாண்டி யன் கொடுத்திருந்த ஆவண ஓலைச் சீட்டுடன் மறையோர் நிலங்களை யெல்லாம் லுண்டாக்கன் அப்படியே கவர்ந்து தன் வசமாக்கிக்கொண்டான். இந்த அக்ரமச் செயலைக்கண்ட மறை யோர் வேலியே பயிரை மேய்ந்தால் என்ன செய்வது? இக் குறும்பன் நிலத்தையும் கவர்ந்தான்; நிலம் நம்முடையதெனக் காட்டும் ஆவணத்தையும் கவர்ந்தான்; நிலத்தை நாம் ஆண்டு அநுபவித்தோம் எனச் சொலத்தக்க அயற்சாட்சிகளையும் வெருட்டிக் கலைத்துவிடுவான். நாம் எவ்வாறு நமது உரிமையை

நாட்டவல்லோம். ஆன்மநாதர் திருவுளம் எப்படியோ; அறியோம்; நமது குலாசாரத்தில் என்ன பிழை செய்தோமோ! ஆன்மநாதர் பூசனையில் என்ன தவறு இழைத்தோமோ இத் தீங்கு நமக்கு நேரிட்டது. நமது தாய் *"யோகாம்பிகை" நம்மைக் காவாது விடுமோ!"—எனப் பலவாறு சொல்லிக் கலங்கி, எப்படியும் இந்த அநியாயச்செயலை நாம் பாண்டியனிடம் சென்று சொல்வதே சரி எனத் தீர்மானித்தனர். அப்பொழுது உபாத்தியாயராயிருக்கும் ஐயர், "அன்பர்களே! நீங்கள் பாண்டியனிடம் சொல்லப்போவது என்ன? தெளிவுபடச் சொல்லுங்கள் பார்ப்போம்" என்றார். அதற்கு மறையவர்களுள் ஒருவர் "நான் திருநீறு அளித்து ஆசி கூறுவேன்" என்றார். நான் "மங்களாசிபவந்து என்பேன்" என்றார் பிறிதொருவர். "நான் அரசனுக்கு ஆசிகூறி வேதார்த்தம் சொல்லுவேன்" என்றார் ஒருவர். "நான் உபநிடதம் விரித்துரைப்பேன்" என்றார் பிறிதொருவர். "நான் ஆகமம் விளக்குவேன்" என்றார் ஒருவர். "நான் ஆகமசாரம் உணர்த்துவேன்" என்றார் பிறிதொருவர். இவ்வாறே தத்தமக்குத் தோன்றியவாறு தாம் தாம் வல்ல சத்தநூல், மீமாம்சை, சிவபுரமான்மியம், அக்கினி தீர்த்தப் பெருமை, ஆன்மநாதர் உண்மை, யோகாம்பிகை மகத்துவம், புராண உண்மை, இதிகாசங்கள், ஸ்மிருதி, நியாயம், மந்த்ர நூல், நாற்பத்து முக்கோணத்தியல்பு எனவரும் பல்வேறு விஷயங்களுள் ஒவ்வொருவர் ஒவ்வொன்று சொல்ல உபாத்தியாயர் புன்னகை செய்து "நாமும் உங்களுடன் மதுரைக்கு வர உத்தேசிக்கின்றோம்" என்றார். அதற்கு மறையோர்கள் "ஐயரே! நீர் எங்களுடன் வந்தால் காரியசித்தி நிச்சயம்" என்றார்கள். உடனே மறையோர் யாவரும் குருந்த மூலத்திறைவரை அடைந்து போற்றி அவர் அனுமதிபெற்றுப் பொதிசோறு எடுத்துக்கொண்டு மதுரைக்கு வழிநடந்தனர். கையில் தண்டேன்றி அண்டர் நாயகராம் உபாத்தியாயரும் உடன்சென்றார். வழியில் உள்ள தலங்களில் தீர்த்தம் ஆடி, இலிங்க நாயகரைப் போற்றிப், பொதிசோறுண்டு, வழியெலாங் கடந்து, மதுரை சேர்ந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி மறையோர் யாவரும் பாண்டியன் மாளிகைக்குச் சென்றனர். கடைகாப்பாளர் பாண்டியன் முன்சென்று சிவபுரத்தினின்றும் மறையோர்கள் தங்களைப் பார்க்க ஆவலுற்று வந்துள்ளாரக ளென்றுரைக்கப் பாண்டியனும் அவர்களை உள்ளே அனுப்புங்கள் என்றனன். நீங்கள் உள்ளே போகலாம் என்று கடைகாப்பாளர்கூற மறையோர்

* 'சிவயோகாம்பிகை'—திருப்பெருந்துறைத் தேவி பெயர்.

உள்ளே சென்று அரசனுக்குத் திருநீறளித்து ஆசிகூறினர். அரசன் யாவருக்கும் இருக்கைநல்கித் தங்கள் பணிகள் யாவும் முட்டுப்பாடின்றி. நல்ல வண்ணம் நடக்கின்றனவோ என வினவினன். மறையோர் "இறைவ! உனது ஆணையால் ஞாயிறு எங்கெழுந்தால் என்ன என்று இதுகாறும் கவலையற்று இருந்தோம். ஆனால் இப்பொழுது ஓர் இடையூறு முளைத்துள்ளது" என்றனர். அது என்ன சொல்லுங்கள் என அரசன் கேட்க, மறையோர் 'ஆத்மநாதர் பூஜைக்காக உனது முன்னோர்கள் எங்களுக்காக விட்ட நன்னிலங்களை எல்லாம் உனது நண்பன் "ஓண்டாக்கன்" கவர்ந்துகொண்டான். இதுதான் எங்களுக்கு உற்ற இடையூறு. இதை உன்னிடம் சொல்ல வந்தோம்' எனக்கூறி, இவர் வேதம் வல்லார், இவர் உபநிடதம் வல்லார், இவர் ஆகமங்கள் வல்லார், இவர் புராணங்கள் வல்லார், இவர் வியாகரணம் வல்லார், இவர் தருக்கம் வல்லார், இவர் இதிகாசம் வல்லார் என்று அவரவர் சிறப்பை எடுத்துக்கூறத் தலைப்பட்டனர். அரசன் "நன்று, அவரவர் சிறப்புக்கும் இவ்வழக்குக்கும் என்ன பொருத்தம்? இப்பொழுது கொண்டுவந்த வழக்கைக் கவனிப்போம். உங்கள் நிலத்தை அவன் கவர்ந்ததாகச் சொல்லுகிறீர்களே. உங்கள் நிலம் என்பதற்கு ஆவணம், ஆட்சி, காட்சி என்னும் மூவகைச் சாட்சி வகைகளுள் ஒன்றேனும் உங்களுக்கு உண்டா" என வினவினன். அதற்கு மறையோர் 'எங்கள் நிலத்தையும் எங்களிடம் இருந்த பத்திரங்களையும் ஓண்டாக்கன் கவர்ந்து கொண்டபடியால் ஆவணம், ஆட்சி எனும் இரண்டுவகை சாட்சிகளைக்கொண்டு எங்கள் உரிமையை நிரூபிக்க எங்களுக்கு இப்போது சாத்தியம் இல்லை. எங்கள் அநுபவத்துக்கு அயலவர் சாட்சியிருந்தும் அவர் ஓண்டாக்கனுக்குப் பயந்து உண்மையை உரைக்க மாட்டார்; ராஜாதிராஜ! நாங்கள் என்செய்வேம்—என உரைத்து நைந்தனர். உடனே பாண்டியன் அங்கு வந்திருந்த ஓண்டாக்கனை நோக்கி "ஐய! இவர்கள் நிலங்களை நீ கவர்ந்தது உண்டோ இல்லையோ சொல்" என்றான். அதற்கு அவன் அரசனைக் கும்பிட்டு "அரசரேறே! அந்த நிலங்கள் தம்முடையன என்று மறையோர் சொன்னால் முயலுக்கும் கொம்புஉண்டு" என்றான். இதைக்கேட்ட பாண்டியன் அந்நிலங்கள் உனக்குச் சொந்தம் என்பதற்கு உனக்கு ஆதாரம் ஏதுளது சொல் என்றான். ஓண்டாக்கன் அந்நிலங்களை நான் தொன்றுதொட்டு அனுபவித்து வருகிறேனே—அதாவது "ஆட்சி" என்னும் சாக்ஷிதான் உளது. வேறு ஆதாரம் நான் சொல்வதற்கில்லை என்றான். "அப்படியானால்

நீ அனுபவித்துவரும் நிலத்துக்குத் தக்கதொரு அடையாளம் கூறு" எனப் பாண்டியன் கேட்டான். லுண்டாக்கன் "இரண்டு பனைமர ஆழத்துக்குத் தோண்டினாலும் அந்த நிலங்களில் நீர் ஊறாது—இதுவே அடையாளம்" என்றான். அரசன் மறையோர்களை நோக்கிப் "பெரியோர்களே! உங்கள் நிலம் என்கிறீர்களே; அந்நிலத்துக்கு நீங்கள் என்ன அடையாளம் சொல்லுகிறீர்கள்" என வினவினன். இதைக் கேட்ட அந்தணாளர் இன்னது சொல்வது எனத்தெரியாது திகைப்புற்றனர். அப்பொழுது உபாத்தியாயராக வந்திருந்த ஐயர் "நான் சொல்வேன் உண்மை அடையாளத்தை. மண்வெட்டி கொண்டு வெட்டினால் வெட்டின வாயிலேயே நீர்க்குமிழி தோன்றும் எங்கள் நிலத்தில்" என்று திடம்பட உரைத்தனர். இதைக் கேட்ட லுண்டாக்கன் 'பேஷ்! நன்றாய் அகப்பட்டுக் கொண்டார்கள் இப்பனவர்கள் (மறையோர்கள்)' என உள்ளம் மகிழ்ந்தான். மற்ற மறையவரோ 'அந்தோ! நெடு நாள் நம்முடைய வீட்டில் உண்டு வளர்ந்த உபாத்தியாயர் இப்படியும் உளறிக் குழறுவாரோ? அந்த வறண்ட நிலத்தில் வெட்டுவாயில் கிட்டுமோ நீர்! இஃதென்ன வேதனை? தானே விலங்கில் மாட்டிக்கொண்ட கதையாயிற்றே' என மெல்லவு மாட்டாது விழுங்கவு மாட்டாது நெஞ்சம் பதைபதைத்தனர். இவர்கள் முகக்குறிகளைக் கண்ட அரசன் உபாத்தியாயராம் அந்தணரை நோக்கி, "ஐயரே! நீர் உரைப்பது உண்மை தானே' என வினவினன். அதற்கு அவர் "யாம் சொல்வது உண்மையே, உண்மையே, முக்காலும் உண்மையே" என்றனர். "ஐயர் சொல்வது உண்மை என்று ஏற்பட்டால் லுண்டாக்கா! நீ செய்யவேண்டியது என்ன சொல்லுக" என்றான் அரசன். "அவர் சொல்வது உண்மையாயின் நிலங்கள் இம்மறையோருக்கே உரியனவாம்" என்றான் லுண்டாக்கன். உடனே பாண்டியன் "மறையோர்களே! நீங்கள் முன்னே செல்லுங்கள். நாம் பின்வந்து இவர் சொல்லின் உண்மையே நேரிற் பரீட்சிப்போம்" என்றான். அங்ஙனமே மறையோரும் வழியெலாங்கடந்து சிவபுரம் அடைந்தனர். பாண்டியனும் பரிமேற்கொண்டு தனது பரிசனத்துடன் சிவபுரத்துக்குச் செல்ல, வெற்றி நமதே என்ற களிப்புடன் லுண்டாக்கனும் உடன்சென்றான். யாவரும் சிவபுரம் சேர்ந்ததும் பாண்டியன் ஆத்மநாதரைத் தரிசித்து, வழக்கு நிலத்தில் ஓரிடத்தமர்ந்து உபாத்தியாயரை நோக்கி "மறையோர் தம்முள் மூத்தீர்! சொல்லியவண்ணம் காட்டும் பார்ப்போம்" என்றான். அதற்கு ஐயர் "மன்னா! வெட்டுதற்கு மண்வெட்டி இங்கு இல்லையே"

என்றார். உடனே வுண்டாக்கன் ஆயிரம் மண்வெட்டிகளுக்கு மேல் அங்கு வரவழைத்தான். மண்வெட்டிகள் வந்தவுடன் ஐயர் அரசனை நோக்கி 'வுண்டாக்கனைக்கொண்டே எங்கேனும் வெட்டிப் பாருங்கள்' என்றார். அரசனும் "வுண்டாக்க! ஏதேனும் ஓரிடத்தில் வெட்டு! பார்க்கலாம்" என்றான். வுண்டாக்கனும் மண்வெட்டிகொண்டு பள்ள நிலங்களை நீக்கி மேட்டு நிலமாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டே வெட்டச் சென்றான். அப்பொழுது இறைவனும் ஐயர் "சொல்லப்படும் அறுபத்தாறு கோடி தீர்த்தமும் இவ்விடத்தில் வந்துறக்கடவ" தெனத் தம்மனத்தில் எண்ணினார். அங்ஙனமே அவைகளும் வந்து மருவின. வுண்டாக்கன் மண்வெட்டிகொண்டு நிலத்தில் ஒரு வெட்டு போட்டு மண்வெட்டியைத் தூக்கினவுடன் ஞேரெலென அவ்விடத்தில் நீர் சுரந்து பெருகி வுண்டாக்கன் முகங் கலங்கப் பீறிட்டுமோதிற்று. கலங்கினன் வுண்டாக்கன்; களித்தனர் மறையோர். வேறிடம்ஒன்று தேடி வெட்டினன் வுண்டாக்கன் அங்கும் நீர்வெள்ளமாய்ப் பொங்கி எழுந்தது. எங்கு எங்கு வெட்டினும் அங்கு அங்கு நீர் பொங்கிக் கிளம்பி வீசி வுண்டாக்கன் முகத்தை நனைக்க, முகத்தைத் துடைத்துக் கொண்டு பின்னும் பின்னும் இடம் தேடி வெட்டினன். "தோல்வியடைந்தேன்; நிலத்தை யிழந்தேன்" என வுண்டாக்கன் அழுது கண்ணீர் விடுவதுபோல வெட்டின இடந்தோறும் நீர் பெருகிற்று. வுண்டாக்கன் சற்றும் சளையாமல் பல இடங்களில் வெட்டி வெட்டிப் பார்த்ததால் எங்கும் நீர் பெருகி வழிதரப் பரவலாலே அவ்விடம் **பெருந்துறை** எனும் பெயர் வாய்ந்தது. இவ்வெள்ளக் காட்சியைக் கண்டு அந்தணர் விம்மிதம் உற்றனர்; பாண்டியன் கழிபேருவகை யடைந்தான்; மண்ணவர் கண்மழை பொழிந்தார்; வானவர் பூமழை பொழிந்தார்.

வியப்பும் மகிழ்ச்சியுங்கொண்ட வேந்தன் வெட்டிப் பார்க்கச்சொன்ன வேதியர் பெருமானை இங்கு அழைமின், அழைமின் என்றனன். ஏனைய அந்தணர்கள் ஐயரிடம் ஓடி "மன்னவன் உம்மை அழைக்கின்றான்; வாரும் வாரும்" என்றனர். அதற்கு அவர் 'மன்னவனிடம் எமக்கு ஆவது என்னகிடக்கின்றது?' என்று சொல்லி எழுந்துபோய்க் குருந்தமூலத்துள் ஒளித்தனர். இக்காட்சியைக் கண்ட அந்தணர் "ஆ! இறைவன் திருவருட் பெருமைதான் என்னே! ஆன்மநாதப் பெருமானே நமது பிள்ளைகளுக்கு உபாத்தியாயராய் அமர்ந்து நமது இல்லங்கள்தோறும் எழுந்தருளி உண்டருளும் ஒரு விளையாடல் இயற்றிய பின்னர் நிலமும் நம்மைச் சேரும்படியான பெரு

விளையாடல் இயற்றினரே! பெறலரும் பேறு பெற்ளும்; நமது பாக்கியமே பாக்கியம்" எனப் பெரிதுவந்து நெக்கு நெக்கு உருகி நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும் நக்கும் அழுதும் தொழுதும்வாழ்த்தி நானவிதத்தாற் கூத்து நவிற்றிப் பாண்டியனிடம் சென்று, "மன்ன! பெரு வழக்காடி வென்ற ஐயர் நமது ஆன்மநாதப் பெருமானே. அவர் குருந்த மூலத்தில் ஒளித்தனர்" என்றனர். இதைக் கேட்ட கோமகன் மெய்சிலிர்த்துக் கைகளுந் தலைமீதேறக் கண்ணில் ஆனந்த வெள்ளம் மெய்யெலாம் பொழிய ஆன்மநாதரைப் பணிந்து போற்றிப் "புள்ளுங் கமலுங் கைக்கொண்டார் தாமிருவர் உள்ளும் அவன் பெருமை ஒப்பளக்குந் தன்மையதோ" என அற்புத உளத்தினனாய்ப் பாராட்டிப் பேருவகை யுற்றனன். பின்னர், ஓண்டாக்கன் செய்த அக்ரமச்செயலை நினைந்து கோபித்து அவனைச் சிறைக்களம்புகச் செலுத்தினன். அந்தணர்களுக்கு அந்தச் சிவபுர நிலத்தினோடு வேறு நிலங்களையும் நல்கித் திருப்தியுறச் செய்தான். தனது சபை முன்னே வந்து நின்று வழக்காடிவென்ற மன்ருடி வள்ளலார் பூசனைக்காகப் பூதானம் முதலிய பலவகைத்தாய தானங்களைச் செய்து பெருமானையும் பெருமாட்டி யோகாம்பிகையையும் போற்றித் துதி செய்து மதுரையம்பதி சேர்ந்தான். அந்தணர்களும் ஆன்மநாதருடைய திருவருட் பெருக்கையும் தம்மடைந்தார்க்கு இனியனும் திறத்தையும் நினைந்து நினைந்து உருகி "ஏழை நாயடியேற் கெளிமையோ பெருமை யாவதுவே" எனப் பணிந்து தங்கடன் அடியேனையும் தாங்குதல், எங்கடன் பணி செய்து கிடப்பதே என ஆத்மநாதரின் பூசைத் தொழிலைக் குறைவற நடாத்தி வாழ்ந்தனர்.

ஆலயப் பிரவேசம்

திருவாவடு துறை ஆதீனத்தார் கருத்து

"தற்சமயம் கோவில்களில் ஹரிஜனப் பிரவேச விஷயமாகப் பொது ஜனங்களுக்குள் அபிப்பிராய பேதம் இருப்பதாக ஆதீன கர்த்தர் அவர்களுக்கு வரும் லெட்டர்கள் மூலமாகத் தெரிகிறது. திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்ததாக இந்த ஜில்லாவில் மூன்று பெரிய தேவஸ்தானங்களும், 12 சிறிய கோவில்களும் இருக்கின்றன. மேலே கண்ட ஆலயப்பிரவேச விஷயத்தில் ஜனங்களின் அபிப்பிராயத்தை அநுசரித்து நடந்துகொள்ள டிரஸ்டி அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவ்விதமான அபிப்பிராயத்தைச் சரியாக தெரிந்து கொள்வதற்குப் பெரிய கோவில்கள் இருக்கிற இடங்களில் பொது ஜனக்கூட்டங்கள் கூட்டுவதாக உத்தேசித்திருக்கிறோம். * * *

இக்கடிதம் 25-7-39-ல் காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது.

—லோகோபகாரி.

ஊணும் உறக்கமும்

[வித்வான், மு. வரதராஜன், B.O.L., திருப்பத்தூர்]

(உ0ரு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊண் உறக்கம் இரண்டிற்கும் உள்ள தொடர்பு யாது? ஊணும் உறக்கமும் முறையே வயிற்றையும் மூளையையும் பொருந்தி யிருக்கின்றன. வயிற்றுக்கும் மூளைக்கும் நெருங்கிய தொடர்பு உளது. தம் உடலைப்பற்றி ஆராய்ந்து வருபவர் அனைவரும் இவ்வுண்மையை நன்கு அறிவர். "அடி வயிற்று நரம்புகள் (abdominal nerves) ஆற்றல் மிகுந்தவை; ஒருவனுடைய எண்ணம், பேச்சு, செயல் இவற்றைக் கெடுத்தலும் காத்தலும் அவற்றால் கூடும். அந்நரம்புகளின் தூய்மையே நோயற்ற வாழ்வு; அவை கெடின் நோய் மிகும்" என்பது ஜெர்மனி இயற்கையாராய்ச்சியாளர் லூயி கூன் (Louis Khune) என்பவர் துணிபாகும்.

ஒரு குழந்தையின் வயிற்றில் ஏதேனும் கோளாறு இருப்பின், உடனே அக்குழந்தை தனக்கு இயல்பான முகமலர்ச்சியும் விளையாட்டும் இழந்து பெற்றோர்க்குத் துன்பந்தரலைக் காண்கின்றோம் அல்லமோ? விலங்குகளின் உடலிலும் இத்தொடர்பு உண்டு. எடுத்துக்காட்டு ஒன்று:—உண்ணும் நேரம், உணவின் அளவு முதலியவற்றில் பிறழாத இயற்கை யுடையது நல்லினத்தைச் சேர்ந்த நாய். ஆனால், பைத்தியம் பிடித்தபின், அந்நாயின் உணவுமுறை வியப்பைத்தரும். அஃது உண்ணாமல் பல நாள் அலையும்; உண்ணத் தொடங்கின், அளவிறந்து உண்ணும்; உண்டவற்றைக் கக்கும். அதன் வால், வளைந்து அடி வயிற்றை அழுத்திய நிலையில் காணப்படும். இவை யனைத்தும் எதனை அறிவிக்கின்றன? அதன் வயிற்றுக் கோளாறுகட்கும் மூளைச் சீர்கேட்டிற்கும் உள்ள தொடர்பையே விளக்குகின்றன.

பைத்தியக்காரர் நிலயத்தில் உண்மையான பைத்தியக்காரருள் பெரும்பாலோரிடம் இதனை ஆராய்ந்து அறியலாம். அவர்களுடைய அடிவயிற்று நரம்புகள் இயற்கை நிலையில் இல்லை. செரித்தற் கருவிகளும் சிறுகுடல். பெருங்குடல்களும் ஒழுங்குடன் தத்தம் தொழில் ஆற்றுதல் இல்லை. அவை கெடவே, மூளையில் கோளாறு தோன்றுதல் இயற்கை ஆயிற்று. செரித்தலின்மை, தீய மலச்சிக்கல் முதலியவற்றால் அடி வயிறு சிறிது கெட்ட அளவில், வாளா வருந்துதல் அன்றி வேறு எத்

தொழிலும் மூளையால் செய்யக் கூடுவதில்லை. இது பலருங் கண்ட உண்மையே அன்றோ?

ஆதலின், மூளை நரம்புகளின் தூய்மை அடிவயிற்று நரம்புகளின் தூய்மைக்கேற்ப நிற்றல் வெள்ளிடைமலை, மூளையை நேரே தூய்மைப்படுத்தும் உரிமையை இறைவன் நமக்கு அளித்திலன்; எனினும், அடிவயிற்று நரம்புகளைத் தூயநிலையில் பாதுகாக்கும் உரிமையை அளித்திருக்கின்றான்.

"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்." —திருக்குறள்

இவை இயற்கை மருத்துவர் ஒருவர் கட்டளையாகும். "முன் உண்ட உணவு அற்ற தன்மையை அறிதல்வேண்டும்; மிகப் பசித்த பின்னரே உண்ணுதல் வேண்டும்; உண்ணும்போது மாறு கொள்ளாத உணவுகளைக் குறித்துக்கொண்டு உண்ணுதல் வேண்டும்; இங்ஙனம் உண்டு வயிற்றைத் தூய நிலையில் காத்தல் இயலுமாயின், மருந்து எற்றுக்கு? வேண்டாம்" என்னும் கருத்தை ஓர்க.

முறையறிந்து நல்லுணவு உண்டு வாழ்பவன் நோயற்று வாழ்வான். நோயற்ற வாழ்வில் நல்ல உறக்கம் உண்டு. எனவே, வயிற்றைத் தூய நிலையில் காத்தால் உறக்கம் இயற்கை நிலையில் இருக்கும் என்பது திண்ணம்.

பேருண்டி கொள்வோர் நெடுநேரம் உறங்குகின்றனர்; காலை மணி எட்டாயினும் எழார். அளவறிந்து உண்போர் அளவுடன் உறங்கி எழுவர். வன்மையான உணவு கொள்வோர் ஆழ்ந்த உறக்கம்—எழுப்புதற்கரிய உறக்கம் பெறுவர். நாட்டுப்புறத்து மக்கள் ஏற்ற எடுத்துக்காட்டாவர். இடையர் பலர் பனியிலும் குளிரிலும் கம்பளி போர்த்து நன்கு உறங்குவர். மழை பெய்யுங் காலங்களில் முல்லை நிலங்களில் மழை வெள்ளம் ஓட, அந்நீரில் மயிர்முடி அலைய, உடுத்த உடை நனைய, சில கற்களைப் பரப்பி அவற்றின்மீது அமைதியாகத் தாம் உறங்குவதும் உண்டு என்று அவர் கூறுவர். மென்மையான உணவு கொள்வோர் மென்மையான உறக்கம்—காக்கை போல் எளிதில் விழிக்கும் உறக்கம் பெறுகின்றனர். உணவின் வன்மை மென்மைக்கேற்ப, மூளையும் வன்மையும் மென்மையும் எய்தும். மூளையின் வன்மைக்கேற்ப உறக்கத்தின் அளவும் இயல்பும் வேறுபடும்.

மூளையின் மென்மையே அறிவுக் கூர்மையைப் பெருக்கும். ஆதலின், அறிவுத்துறையில் உழைப்பவர் மென்மையான உணவே கொள்ளுதல்வேண்டும். கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய வன்மையானவற்றை உண்ணும் நாட்டுப்புற மக்கள் உடலுரம் பெற்றிருக்கின்றனர்; ஆனால், மென்மையான மூளை யின்மையால், (பொதுவாகக் கூறுமிடத்து) நுண்ணறிவு அற்ற வராகின்றனர். ஏனையரோ, அரிசிச் சோறு முதலிய மென்மை யான உணவு உண்டு உடல் மெலிவுற்றிருப்பர் எனினும் மூளை மென்மையால் அறிவிற்சிறந்து விளங்குகின்றனர். இத்தகை யோர், உணவைக் குறித்த ஆராய்ச்சியின்றி வன்மையான உணவு உண்பாராயின், உடல் நோயுற்று, மூளையுழைப்புக்குத் தகுதியற்றவர் ஆவர். இது பற்றியே, அறிவுத்துறையில் உழைக்கும் அறிஞர் பலரும் உடல் மெலிந்து அடிக்கடி நோய் வாய்ப்பட்டுத் துன்புற நேர்கின்றது. என் செய்வது? இயற் கையின் கட்டளையை எதிர்த்தல் எங்ஙனம்? அவ் அறிஞர்க்கு நல்ல உறக்கம்—கனவும் கலேவும் அற்ற உறக்கம்—மிகமிக இன்றியமையாதது. அடிவயிற்று நரம்புகள் தூய நிலையில் இல்லையேல், நல்ல உறக்கம் உண்டாதல் எங்ஙனம்? ஆதலின், உணவைக் குறித்த ஆராய்ச்சியில் தேர்ந்து அந்நரம்புகள் தூய நிலையில் இருக்குமாறு காத்தல்வேண்டும். அங்ஙனம் காத்து, அமைதியுடன் போதிய நேரம் உறங்காவிடின், அவ்வறிஞர் நோயற்றவாழ்வு வாழ்தல் இயலாது.

'வைகறைத் துயிலெழு' என்னும் முதுமொழி அனைவர்க் கும் பொதுவே. ஆயினும், அறிவுத்துறையில் உழைப்போர் பலர் வைகறையில் துயிலெழுதல் இல்லை. உடலுழைப்பு மட்டும் உடையவர் வைகறைப் பொழுதில் உறங்காது விழித் திருத்தல் எளிதில்கூடும். அறிவுடைய மக்களும் பகலில் மூளை உழைப்பு இன்றி வாளா இருப்பின், வைகறையில் துயிலெழுதல் கூடும். ஆனால் நாடோறும் மூளை உழைப்பு உடைய மக்கள் அங்ஙனம் எழுதல் அருமை. பதினேழாம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டில் கணக்கில் வல்லவராக விளங்கிய டெஸ் கார்டிஸ் (Descartes) என்னும் அறிஞர் மெலிந்த உடலினர்; அவர் உடல் நலத்தைக் காத்தற்காகவும், கணக்குத் துறையில் சிறந்து விளங்குதற்காகவும், தாம் வைகறையில் நன்கு உறங்கிய தாகவும், தாமே எழுமுன் வேறெவரும் எழுப்பாதவாறு தடுத்து வந்ததாகவும் கூறினார். டாக்டர் ஆர்னல்ட், (Dr. Arnold) பிஷப் செல்வின் (Bishop Selwyn) போன்ற மேனாட்டு அறிஞர்கள் வாழ்வாலும் இது நன்கு விளங்கு கின்றது.

சாமுவல் ஜான்சன் (Samuel Johnson) என்பவர் ஆங்கிலப் பேராசிரியர்களில் ஒருவர். அவர் நண்பகல் வரை படுக்கையில் கிடத்தல் உண்டு என்றும், ஆனால் இளைஞர்களுக்கு அறிவுரை கூறுமிடத்து வைகறையில் துயிலெழுமாறு வற்புறுத்தினார் என்றும் தெரிகிறது. தாமே அரிதின் முயன்றாலும், பிறர் முயன்று எழுப்பினாலும், பள்ளிமாணவர் வைகறையில் எழக்கூடாமல் வருந்தக்காண்கின்றோம். ஆயின், அங்ஙனம் எழாமை நன்று எனக்கொள்ளுதல் வேண்டா. மூளை உழைப்பு உடையோர் வைகறையில் எழுந்து நல்வாழ்வு வாழ முயன்றால், அவர் முன்னிரவில் எட்டுமணிக்குள் உண்டு உறங்கப் பயிலுதல் இன்றியமையாதது. ஆனால் இக்காலத்து நாகரிக வாழ்வில் எட்டுமணிக்குள் உண்டு உறங்குதல் இயலுமோ? ஆதலின், அவரவர் வாழ்விற்கேற்ப, இயன்றவரை முயன்று, பொழுது விடிந்தவுடனாவது எழுதல் நலம்.

ஆண்களைவிடப் பெண்கள் மெலிந்த உடலும் கூரிய அறிவும் உடையராயிருத்தல் பற்றியே, ஆண் ஆறுமணி நேரமும் பெண் ஏழுமணி நேரமும் உறங்குதல் வேண்டும் என்று ஆங்கிலப் பழமொழி ஒன்று கூறுகின்றதுபோலும்! ஆனால், நம் நாட்டில், கற்புடைய பெண்டிர் கணவர்க்குப் பின் தூங்கி முன் எழுதல் கடமை என்பர். பெண்டிர் உடல், மூளை இரண்டாலும் 'மெல்லியலார்' என அறிந்தும், இங்ஙனம் கூறும் காரணம் என்ன? கற்புடைய மடந்தையர்க்குக் கணவன் பணியே கடவுட்பணி ஆதலின், அப்பணியை முட்டின்றி முடித்தல் வேண்டும். வைகறைத் துயிலெழாவிடின், தம் கடமையை எங்ஙனம் நிறைவேற்றுவர்? எனவே, மூளைக்கு உழைப்பைத் தந்து வைகறைவரை உறங்குதலைவிட, கணவர்க்குரிய தொண்டே செய்து வைகறையில் எழுதல் விழுமிது என எண்ணி இங்ஙனம் வற்புறுத்தினர் போலும்! உண்டி பெருகின் உறக்கமும் பெருகும், எழுதல் இயலாதுபோம் எனக்கருதியே, "உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" என மற்றொரு வகையானும் வற்புறுத்தலாயினர். இவற்றால், முன்னோர், ஊண் உறக்கம் இவற்றிற்குள்ள நெருங்கிய தொடர்பை நன்கு ஆராய்ந்து அறிந்தமை தெளிவாகின்றது.

நறுவீ முல்லை

சந்தனமும் சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங்கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகைசிறந்து, வண்டறைந்து தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்டென்றல் இடை விராய்த் தனியவரை முனிவுசெய்யும் பொழில்.

* * *

விசும்பு துடைத்து, பசும் பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்டேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை.

* * *

அணி கிளர் அருவி ஆடகப்பாறைமேல் அதிர்குரன் முரசின் கண்ணிரட்ட.

* * *

நீல ஆலவட்டம் விரித்தாற்போலத் தன் கோலக் கலாவங் கொள விரித்து ஓர் இளமயில் ஆடுவது.

* * *

வடகடலிட்ட ஒரு நுகம் ஒரு துளை தென் கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போல.

* * *

வெங்கதிர்க் கனலியும் தண்கதிர் மதியமும் தம் கதிவழுவித் தலைப்பெய்தாற் போல.

* * *

தலை மகற்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என்பன குணம்.

* * *

எப்பொருளாயினும் அப்பொருட்கண் நின்று அம் மெய்ம்மையை உணர்வது அறிவு.

* * *

நிறை என்பது காப்பன காத்துக் கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம்.

* * *

ஓர்ப்பு என்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்தல்.

* * *

கடைப்பிடி என்பது கொண்ட பொருள் மறவாமை.

* * *

தலைமகட்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன குணம்.

* * *

நாணம் என்பது பெண்டிர்க்கு இயல்பாக உள்ளதொரு தன்மை.

* * *

மடம் என்பது கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை.

அச்சம் என்பது பெண்மையின் தான் காணப்படாதோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவது.

* * *

பயிர்ப்பு என்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை.

—இறையனூர்.

* * *

அறமும் பொருளும் இழத்தலே யன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாங் கருதிய இன்பமும் இழக்கின்றார்.

* * *

புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகையாகிய காமம் அடக்குதற் கருமையின் அதனை யடக்கிய ஆண்மையே பேராண்மை.

* * *

புலம்வென்ற புன்மையில் காட்சியவர்க்கு வறுமை யின்மையின் வெஃகுதலுமில்லை யாயிற்று.

* * *

வெஃகாதான் செல்வம் அஃகாது.

* * *

உலகநடை வேதநடைபோல அறநூல்களுட் கூறப்படுவதன்றித் தாமே யறிந்து செய்யுந் தன்மைத்து.

* * *

ஒப்புரவறிதலாவது உலகநடையினை யறிந்து செய்தல்.

* * *

தவிருந் தன்மைத்தல்லது கடப்பாடு.

* * *

உலகநடைவழு வேதநடைவழுப்போலத் தீர்திறனுடைத் தன்று.

* * *

ஈகையாவது வறியரா யேற்றோர்க்கு மாற்றாது கொடுத்தல்.

* * *

குறியெதிர்ப்பையாவது அளவுகுறித்து வாங்கி அவ்வாங்கிய வாறே எதிர் கொடுப்பது.

* * *

புகழ்தான் உரையும் பாட்டுமென இருவகைப்படும்.

* * *

பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாம்.

* * *

ஆக்கமாகுங் கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல்.

* * *

உளதாகுஞ் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல்.

(புகழை) எச்சமென்றார், செய்தவரிறந்துபோகத் தான் இறவாது நிற்றலின்.

—பரிமேலழகர்.

* * *

இரக்க குணம் மக்கள் அல்லாத மற்றைய உயிர்களிடத்தில் இல்லை.

* * *

எவர்கள் மென்மையான இனிய இரக்க குணம் உடையவராகின்றார்களோ அவர்களுக்கே எல்லாம்வல்ல கடவுள் அருள் புரிவான்.

* * *

கொலைக் குணமில்லாதவர்களின் உடம்பு உயிரெல்லாம் இறைவன் கலந்து நின்று பொலிகுவான்.

* * *

உருவ அமைப்புகள் திருத்தமாய் முதிரமுதிர மக்கள் அறிவும் முதிரும்.

* * *

அறிவில் உருவங்கள் தோன்றாதிருக்கும் வரையில் அவ்வறிவு மழுங்கிக் கிடக்கும். அவ் வுருவங்கள் தோன்றத் தோன்ற அவ்வறிவு மிகுதியும் விளக்கமுடையதாம். எவனுடைய அறிவு திருத்தமான உருவங்கள் மிகுதியும் உடையதாகின்றதோ அதுவே மிகச் சிறந்த அறிவாய்த் திகழ்கின்றது.

* * *

கலங்கிய நிலையில் ஏதோ ருருவமுமின்றி இருந்த எல்லாப் பொருள்களும் உருவங்களைப் பெறுதற்கு ஒரு பேரறிவின் உதவி இன்றியமையாதது.

* * *

பிராஞ்சு தேயத்திற் புகழ்பெற்ற இயற்பொருள் நூலாசிரியராய் விளங்கா நின்ற பாரடக் என்பார் நுண்ணிய பொறிகள் பலவற்றின் உதவிகொண்டு பல்லாண்டுகளாக ஆராய்ந்து கண்ட முடிவுகளும் அறிவுக்கு உருவமுண்டென்பதையும் அஃது ஏனை உருவங்கள்போல் அழியாது என்றும் நிலைபெறுமென்பதையும் இனிது காட்டுகின்றன.

* * *

மக்கள் உலகத்திலுள்ள எந்தப் பொருளைக் கடவுளாக நினைந்து வணங்கினாலும் அவ்வணக்கம் அப்பொருள் உருவத்தின்கட் செல்லாமல் அதற்கு முதலான இறைவனது அருட்பொருள் உருவத்தின்கட் செல்லுமென்பதும், அங்ஙனஞ் செல்லவே அவர்க்கு அவ்விறைவனருள் கிடைக்குமென்பதும் உறுதியாம்.

—மறைமலை யடிகள்.

உலகத் தோற்றம்

[N. K. வேலன், பீ. ஏ.]

நாம் வாழும் இவ்வுலகில் மலைகளும், ஆறுகளும் கடல்களும், பாலைவனங்களும், காடுகளும் நிறைந்துகிடக்கின்றன. இதைப் போன்று பன்மடங்கு பெரிய உலகங்கள் வானவெளியில் சுழன்றுகொண்டிருக்கின்றன. பூமி தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னர் தோன்றிய எண்ணிறந்த அண்டங்கள் தமது வெப்பத்தை இழந்து குளிர்ந்து இறுகிப்போய் உள்ளன. ஞாயிற்றினைவிடப் பூமி மிகச் சிறியது.

ஞாயிறு மிகத் தொலைவில் இருப்பினும் அதன் ஒளி விரைவில் நம்மிடம் வந்து சேர்கின்றது. ஒளி விநாடி ஒன்றுக்கு 186,000 மைல் கடுகிச் செல்லுமெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஞாயிறு மிகப்பெரிய அனற் பிழம்பாக இருந்து நாளடைவில் குளிர்ச்சியுற்றுச் சுருங்கி வந்ததென்றும், அதனால் அதன் மேற்புறம் உடைந்து பல துண்டுகளாகச் சிதறிப் போயிற்று என்றும், இத்துண்டுகளே பல கோள்களாக மாறி அதனைச் சுற்றிவரத்தொடங்கின என்றும் வானநூல் ஆராய்ச்சியாளர் கூறுவர். இங்ஙனம் சிதறிய கோள்களில் பூமியும் ஒன்றாகும். அனற் பிழம்பாகவும் நெருப்புக் குழம்பாகவும் இருந்த பூமியைக் கடல்களும், பாறைகளும், உயிர்களும், செடி கொடிகளும் நிறைந்த அழகிய உலகமாக மாற்றியமைத்த இறைவன்றன் பேரருளினை என்னென்று வியப்பது!

தீக்குழம்பாய் இருந்த பூமி தானாகக் குளிர்ந்து அதன் மேற்புறம் கட்டியாக மாறிற்று. குளிர்ச்சி மிகுதியால் இறுகிய பூமியிற் பிளவுகள் ஏற்பட்டு உலகம் எங்கணும் எரிமலைகள் தோன்றின. இவற்றினின்றும் கிளம்பிய நீராவி குளிர்ந்து மழையாகப் பொழிந்தது. இதனால் பூமியில் ஆறுகளும் கடல்களும் உண்டாயின. இதற்குப்பின் உயிர்களுக்கு இன்றியமையாததான காற்றும் தோன்றியது. ஆகவே பலகோடி ஆண்டுகளாய்க் கொதித்துக்கொண்டிருந்த அனற் குழம்பிலிருந்து உயிர்கள் உய்வதற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் படைக்கப்பட்டன. காற்றும் நீரும் ஒன்றுபட்டுக் கரடுமுரடாயிருந்த நிலத்தைப் பண்படுத்தி உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற முறையில் திருத்தி அமைத்தன.

படைப்பின் வியத்தகு செயல்களைக் காணுந்தொறும் காணுந்தொறும் இறைவன்றன் பேராற்றலும் பேரருட்டிறமும்

வெளிப்படுகின்றன. பூமிக்கு ஞாயிற்றின் ஒளியும் வெப்பமும் முதன்மையாக வேண்டப்படும். பூமி கதிரவனைவிட்டு அகன்றிடினும் அதனையே ஓயாது சுற்றிக்கொண்டு வருதலால் அதன் ஒளிக் கதிர்கள் பூமியிற்பட்டு ஆங்குள்ள உயிர்கள் எல்லாம் தழைத்து வருகின்றன. இக்கதிர்கள் உயிர்களின் மேல் நேராகப் பாய்ந்தால் அவை அனைத்தும் அழிவுறும் ஆகலின் ஆண்டவன் பெருங்கருணையுடன் பூமியைச் சுற்றிலும் காற்றினைப் பரப்பி வைத்தனன்போலும். இக்காற்று ஒளிக் கதிர்களைத் தடுத்து உயிர்களுக்கு வேண்டிய அளவு ஒளியை மட்டும் பூமிக்குச் செல்லவிடுகின்றது. இங்ஙனமாக உயிர்கள் வீணே அழிந்துபோய்விடாமல் பாதுகாக்கப் படுகின்றன.

உலகில் உயிர்கள் தோன்றிய காலந்தொட்டுப் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. கடல்கள் இருந்த இடங்களில் மலைகளும், மலைகள் இருந்த இடங்களில் கடல்களும் தோன்றி உள்ளன. உலகிலேயே மிகவும் உயரமானதெனக் கூறப்படும் இமயமலையும் கடலினின்றும் வெளிக்கிளம்பியதென ஆராய்ச்சியாளர் கூறுவர். உலகம் முழுவதும் காடுகளால் மறைக்கப்பட்டிருந்த காலமும் உண்டு. நாடுகள் அனைத்தும் பனிமலைகளின் அடியில் மறைந்து கிடந்த நாட்களும் உண்டு. மக்கள் தோன்றி நெடுங்காலத்திற்குப் பின்னரே பூமி உருண்டை வடிவானதென்றும் அது ஞாயிற்றினைச் சுற்றிவருகின்றதென்றும் கண்டறிந்தனர். நாம் பகலில் வேலை செய்து இரவில் ஓய்வு எடுத்துக் கொள்கிறோம். பூமி தானுகச் சுழல்வதால் பகலும் இரவும் உண்டாகின்றன. ஆகவே பூமியின் சுழற்சியும் மக்களின் நன்மைக்காகவே ஏற்பட்டதன்றோ !

பூமி தீக்குழம்பாய் இருந்த காலத்தில் அதிலிருந்து உடைந்து விழுந்த பகுதியையே நாம் திங்கள் எனக் கூறுகின்றோம். பூமியைப் போலவே திங்கள் மண்டிலத்திலும் அக்காலத்தில் பல பெரிய எரிமலைகள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருந்தன. நாளடைவில் திங்கள் குளிர்ந்துகொண்டே வந்துஅதன் வெப்பம் முழுவதையும் இழந்து அழகிய நிலவாக மாறிவிட்டது.

நம்மைத் தாங்கும் உலகம் பற்றுக் கோடு ஏதுமின்றி அந்தரத்தில் ஆடிக்கொண்டு இருக்கின்றது. அதனுடன் சேர்ந்து நாம் அனைவரும் மணிக்கு ஆயிரம் மைல் விரைவுடன் சுழன்றுகொண்டிருக்கின்றோம். ஆயினும் நாம் சுழல்வது நமக்குத் தெரிவதில்லை. “அவனன்றி ஓரணுவும் அசையாது” என்னும் அருள்வாக்கினை நினைவில் வைத்து, உலகங்களை எல்லாம் படைத்துக் காக்கும் எல்லையற்ற பரம்பொருளுக்கு நன்றி செலுத்துவது நமது கடன்.

இந்தியாவின் பண்டைக் கலை*

[வித்வான் மா. இராசமாணிக்கம், B O.L.]

I

ரிக்வேதச் சுலோகங்களைச் செய்தவர்கள் பஞ்சாபில் சிந்துப்பிரதேச மக்களுடனும் ஈரானியருடனும் ஆப்கானியருடனும் இருந்து வந்தனர். மத்திய ஆசியாவில் இருந்த ஆரியர்பால் குழப்பம் ஏற்படும் பொழுதெல்லாம் அவர்களுட் சிலர் அவ்விடம் விட்டுப் பல இடங்களுக்குப் போதல் இயல்பாக இருந்தது. அதனை, கிறிஸ்தவ சகாப்தத் தொடக்கத்தில் தெற்கு நோக்கிவந்த பாக்டீரிய கிரேக்கர், சாகர், பஹ்லவர், அப்ஹிரர், குஷானர் முதலியோரைக்கொண்டு நன்குணரலாம்.

ரிக்வேதச் சுலோகங்களுட் பல, **ஆரியர்க்கும் தாசர்க்கும்** உரிமை கருதி உண்டான போராட்டங்களைக் குறிப்பனவாகவே உள்ளன. அச் சுலோகங்கள் ஆரியர்-தாசர் என்னும் மாறுன இருவரைப்பற்றியே பேசுகின்றன. **இவ்விரு வகுப்பாரும் இரு வேறுபட்ட கூட்டத்தினராகவும் மதத்தினராகவும்** இருந்தமையே போராட்டங்கட்கும் பகைமைக்கும் காரணமாகும்.

ஆரியர், கறுப்பர்க்கு இட்ட பெயரே '**தாசர்**' என்பது ஆயினும், அப்பெயர் நீண்டகாலம் இருந்திலது. அப்பெயர் நாளடைவில் நீக்கப்பெற்று, அவ்விடத்தில் '**சூத்ரர்**' என்னும் புதிய பெயர் குடிகொண்டது. 'ஆரியர்' என்னும் சொல், மண்டையோட்டுக் கலையைப் (தாசரினும் வேறுபட்ட மனித இனம்) பற்றியது என்பது நன்கு கவனித்தற்கு உரியது. ஆரியர், தம்மை மநுவைப் பின்பற்றுபவர் எனக் கூறிக்கொண்டனர். 'ஆரியர்' என்பது தனிப்பட்ட ஒரு மனித இனத்தவரையே குறிக்கும் சொல். இந்திய எல்லைப்புற மாகாணம் ஒன்று 'ஆரியனி' எனப் பெயர் பெற்று இருந்ததாகவும், அதில் 'ஆரியோய்-த்ரங்கி' என்னும் சிறந்த இரண்டு வகுப்பார் வசித்திருந்தனர் என்றும் கிரேக்க ஆசிரியர் குறித்திருப்பதாலும் இவ்வுண்மையை நன்கு உணரலாம். 'ஆரியனி' என்பது 'ஆரியோய்' என்பதிலிருந்து இடப்பட்டதாகலாம்

---

* இஃது, இவ்வாண்டு—பெப்ருவரிமாத இறுதியில் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில், கல்கத்தாப் பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியராக இருந்த டாக்டர் பண்டர்க்கர் செய்த ஆறுநாட் சொற்பொழிவின் சாரம்.

என்பது தெளிவு. கி. பி. 9-ம் நூற்றாண்டு வரையில் 'ஆரியர்' என்னும் வகுப்பார் இருந்ததாக இராஜபுதன சாஸனங்களால் அறிகின்றோம்.

ஆரியர் தம்மினும் வேறுபட்ட மக்களைக் குறிக்க வழங்கிய 'தாசர்' என்னும் சொல்லே ரிக்வேதத்தில் நிரம்பக் காணப் படுகிறது: 'சூத்ரர்' என்பது ஓர் இடத்திலேயே காணப்படுகி றது. ஆனால், இவ்விரண்டாம் சொல் அதர்வ வேதத்தில் மிகுந்த அளவு இடம் பெற்றுள்ளது. ஆரியர் அல்லது தாசர் என்பது போலச் 'சூத்திரர்' என்பதும் தனிப்பட்ட ஒரு வகுப் பாரையே (மனித இனத்தையே) குறிப்பிடுவது என்பது அறியத் தகும். மாசிடோனியச் சரித்திராசிரியர் 'சூத்ரர்' என்பவர் களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். தாலமியும் குறிப்பிட்டுள் ளார். வடமொழி இலக்கணியான பதஞ்சலியும் 'சூத்திரர்- தனிப்பட்ட வகுப்பார்' எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இச்சொல், பிற்காலத்தில் அந்நியரைக் குறிப்பிடப் பயன் படுத்தப்பட்டது. பதஞ்சலி, பல சூத்திரர் ஜாதிகளையும் வகுப்புகளையும் குறிப்பிட்டதிலிருந்து இதனை அறியலாம். சாகரும் யவனரும் ஆரிய வேள்விகளைச் செய்வதோடு அமை யாது, ஆரியர் உண்கலத்து உணவையும் வெறுப்பின்றி உண்டு வந்தனர் என்றும் பதஞ்சலி பகர்ந்துளர். எனினும், அவர்க ளிடை வர்ணாஸ்ரம தர்மம் இல்லாததால், அவர்கள் 'சூத்திரர்' எனப்பட்டனர். ஆரியர் கலையை அறைகுறையாகப் பின் பற்றினவரும் அந்நியரும் 'சூத்திரர்' எனவே ஆரியரால் சுட்டப்பட்டுள்ளனர்.

(ஹிந்து, 22-2-1939)

II

ஆரியர் முதன் முதலில் இந்தியா வந்தபொழுது அவர் தம் 'கலையறிவு' (Culture) ரிக்வேதப்படியாதாக இருந் ததென்பதைக் காண்போம்: சாணக்கியரும் தர்மசாஸ்திரங் களும் விரித்துக்கூறும் வர்ணாஸ்ரமதர்மம் எந்த அளவு ரிக் வேதகால ஆரியர்க்குள் இருந்தது என்பதைக் காணல் வேண் டும். ரிக்வேதத்தில் உள்ள 'புருஷ சூத்திரம்' நான்கு வருணங் களையும் குறிக்கிறது. ஆனால் அக்காலத்தில் 'சூத்திரர்' என்னும் சொல் ஆரியர்க்குள்ளேயே ஒரு வகுப்பாரைக் குறித் ததன்று; ஆரியர் அல்லாத மக்கள் அனைவரையுமே குறித்தது என்பது அறியத் தக்கது. 'பிரம்மச்சரியம், க்ருஹபதி, முனி' என்னும் ரிக்வேதச் சொற்கள் ஆஸ்மரங்களைக் குறிப் பன. மூன்றும் சொல் இக்கால 'வானப்பிரஸ்தம்' குறிப்ப

தாகலாம். இவையன்றி, 'யதி' என்னும் பெயருடன் சில குறிப்புகள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை இந்திரனால் ஏற்கப்படாதவை. எனவே, அவை ஆரியர்கலைக்கு அப்பாற் பட்டன என்பது தெரிகிறது. அச்சொல் (யதி), ஆரியருடன் இந்தியாவில் வாழ்ந்து வந்த அசுரரது ஒரு வகுப்பைக் குறிப் பதாகக் கொள்ளலாம்.

ரிக்வேத காலத்தில் வருணங்களைப்பற்றிய கடுமையான கட்டுப்பாடு இல்லை என்பது மனத்தில் நன்கு இருத்தத் தக்கது. க்ஷத்ரியரும் வேதச்சுலோகங்கள் பாடலாம்—புரோ கிதம் செய்யலாம் என்னும் வசதி இருந்தது. தம்மை 'இராஜன்' என்றும் 'ரிஷி' என்றும் கூறிக்கொண்ட விஸ்வா மித்திரர் சுலோகங்களே இதற்குச் சான்றாகும். ரிக்வேத காலத்திலும் அதன் பிற்பட்ட காலத்தும் ஆஸ்ரமம் மிக்க குழப்பத்திலேயே இருந்தது. நான்கு ஆஸ்ரமங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக ஒருவன் பின்பற்ற வேண்டுமா? வேண்டாவா? என்னும் முடிவுக்குத் தர்மசாஸ்திரங்களும் வரக்கூடவில்லை. **இந்தியாவில் ஆரியரால்தான் வர்ணாஸ்ரம தர்மம் நுழைக்கப்பட்டது** என்னும் ஒன்றே ரிக்வேதத்தால் நாம் உணர்வது. ரிக்வேதத்தை ஒரு முறை படிப்பின், சுய நலங்கொண்ட புரோகித வகுப்பாரது ஆதிக்கம் அதிகமாக இருந்தது என்பதை நன்கு அறியலாம் என்பது உண்மையே. எனினும், ஒரு கடவுள் உண்மையை அப்பழைய காலத்தி லேயே ரிக்வேத ஆரியர் உணர்ந்திருந்தனர் என்பது சில சூத்திரங்களால் அறியக்கிடத்தல் இன்பம் தருவதாகும். அவர் கள் இறைவனை 'அப்பன், உற்றான், உறவினன், அண்ணன்' முதலிய பெயர்களால் அழைத்தனர் என்பது சுலோகங்களால் தெரிகிறது. இந்த ஒரு கடவுள் உண்மையே, பல்வேறு மதக் கோட்பாடுகள் உடையவரையும் ஒன்று சேர்த்து இன்றை இந்து மதத்தின் அடிப்படையாக இலங்குகின்றது. வருணன் சிறந்த கடவுளாகப் பூசிக்கப்பட்டான். வசிட்டர் முதலி யோர் தங்கள் குறைகளை வெளியிட்டுப் பூசை செய்த உண்மை சில சுலோகங்களால் வெளியாகின்றது. 'பரம்பொருளும் ஆன்மாவும் இரண்டு பறவைகள். அவை, இவ்வுலகம் என்னும் மரத்தின்மீது அமர்ந்துள; ஒன்று இனிய பழத்தைத் தின்று துன்புறுகின்றது. மற்றொன்று அதனைப் பார்த்துக்கொண் டிருக்கிறது. அதனை மனிதன் காண்கையில் அவன் வருத்தம் மறைகின்றது,' என்னும் பொருள்படும் சுலோகம் ரிக்வேதத் தில் உள்ளது.

(தொடரும்)

பண்டைத் தமிழர் காலக்கணக்கு முறை

[பண்டித ஞா. தேவநேசன்]

ஆதியில் ஒவ்வொரு நாட்டிலும், மக்கள் காலத்தைக் கணக்கிடுவதற்குச் சூரியனையே அடிப்படைக் கருவியாகக் கொண்டிருந் திருக்கின்றனர் என்பது எவர்க்குஞ் சொல்லாமலே விளங்கும்.

"தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்."

என நாலடியாருங் கூறுகின்றது.

சூரியனின் தோற்ற மறைவுகளினால் முறையே பகலும் இரவும் நிகழ்கின்றன. ஒரு பகலும் ஓர் இரவுஞ் சேர்ந்து ஒரு நாள் என்னும் அளவாயிற்று.

மக்கள் நாகரிகமடைந்து, நுட்பமாய்க் காலத்தைக் கணக்கிட நேர்ந்தபோது, ஒரு நாளுக்குள், நாழிகை (24 நிமிடம்), மணி, நிமிடம், நொடி (விநாடி) முதலிய நுண்கால அளவுகளும் சூரியனின் எழுச்சி வீழ்ச்சிகளால் காலை மாலை என்னும் வேளைகளும், இராப்பகல்களின் தோற்ற நடுவிறுதிகளால் 4 மணி நேரங்கொண்ட சிறு பொழுது என்னும் அளவும் எழுந்தன. ஒருநாளுக்குமேல், எழுகோள் (கிரகம்) களின் பெயரால் வாரம் என்னும் அளவும், மதியின் வளர்வு தேய்வுகளால் பக்கம் (Fortnight) என்னும் அளவும் ஒரு வளர்பிறையும் ஒரு தேய் பிறையுஞ்சேர்ந்து மாதம் என்னும் அளவும், மருத்துவ முறையால் மண்டலம் (40 அல்லது 48 நாள்) என்னும் அளவும், தட்பவெப்பநிலை (சீதோஷ்ணஸ்திதி) மாறுபாட்டால் பெரும்பொழுது (பருவம் = 2 மாதம்) என்னும் அளவும், சூரியனின் வடதென்வழிகளால் அயனம் (6 மாதம்) என்னும் அளவும், ஒரு வட வழியும் ஒரு தென்வழியுஞ் சேர்ந்து ஆண்டு என்னும் அளவும், சில பஞ்சங்களினால் அறுபதாண்டு கொண்ட ஓர் அளவும், எரிமலையாலும் கடல்கோளாலும் நிகழ்ந்த சில பெருநிலத்தழிவுகளால் ஊழி (யுகம்) என்னும் அளவும், நாலூழிகூட்டிச் சதுரூழி என்னும் அளவும் ஏற்பட்டன. இவற்றுள் ஊழியும் சதுரூழியும் புராணமுறை பற்றியனவேயன்றி, உண்மையான சரித்திரமுறை பற்றியன வல்ல.

மேற்கூறிய சிற்றளவுகட்கும் பேரளவுகட்கும் ஆதாரமாயிருப்பது நாள் என்னும் அளவேயாகும்.

பகல் இரவு என்னும் இருபகுதிகளில், பகலானது வீட்டை விட்டு வெளியேறி வழங்கவும், வேலை செய்து பொருள் தேடவும் இருதிணைப் பொருள்களையுங் காட்சிகளையுங் கண்டு களிக்கவும், அன்பான நண்பருடன் அளவளாவவும் இனத்தாரொடுகூடி உறவாடவும் பெரிதும் உதவுவதாகும். ஆதலால் பகல் இன்பகாலமாக எண்ணப்படுகின்றது. ஆனால், இரவோ மேற்கூறியவற்றிற்கு மிகுதியும் இடனுகாமையானும், தெளிந்த பார்வையின்மையானும் துன்பகாலமாக எண்ணப்படுகின்றது. இதனாலன்றோ, சிறையாளரை இருட்டறையில் அடைப்பதும், நரகத்தை 'இருளுலகம்' என்பதும், துன்பத்தை யிருளாகப் பாவித்துக்கொண்டு நரகாசுரன் மாய்வால் துன்பந்தீர்ந்ததைக் குறிக்கத் தீபாவளியிரவன்று தீபமேற்றிக் களிப்பதும். (இத் தீபமேற்றும் வழக்கம் இக்காலை நின்றுவிட்டது.) இரவில் வேலைசெய்தலின் அருமை நோக்கியே 'அல்லும் பகலும்' 'இரவும் பகலும்' 'இரவு பகலாய்' என்னும் தொடர்களில் இரவு முற்கூறப்பட்டது.

இனி, இராக்காலம் பேய்கள் வழங்குங் காலமாகக் கூறப்படுதலால், 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்றபடி அச்சத்திற்கிடமானதுமாகும். அதோடு நச்சுயிர் (விஷப்பிராணி)களும் கொடிய விலங்குகளும் வழங்குங் காலமுமாகும் ஆனால் இவையெல்லாம் நம் முன்னோர் கருத்தில் ஓர் துன்பமாகத் தோன்றியில. எவ்வகையொலியும் அடங்கிய உறக்க நிலையே இராக்காலத்தில் ஓர் அழிவுணர்ச்சியைத் தமிழ்மக்கள் உள்ளத்தில் உண்டுபண்ணியிருக்கின்றது. மூச்சு ஒன்று தவிர மற்றப்பேச்சு முதலிய யாவும் ஒடுங்கிய உறக்க நிலை இறப்பு நிலைக்கு ஒப்பாயிருப்பதால், அதையே ஓர் அழிவுபோல நம் முன்னோர் கருதியிருக்கின்றனர். இறந்தவனை 'அடங்கிவிட்டான்' என்றும், ஊரார் உறங்குவதை 'ஊர் அடங்கிற்று' என்றும் கூறுவதை உய்த்துணர்க.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்."

என்றார் திருவள்ளுவரும்.

பண்டைத்தமிழர் உறக்கநிலையை ஒருவகை அழிவுநிலையென்றும், அது நிகழ்கின்ற இராக்காலத்தை ஒரு வகை அழிவு காலமென்றுங் கருதியதை, எல்லாப் பொருள்களும் இறைவனுக்குள் ஒடுங்குவதாகக் கூறப்படுகின்ற ஊழியிறுதிச்

சங்கார நிலையை ஓர் இரவிற்கும், அப்பொருள்களின் ஒடுக்கத்தை ஓர் இளைப்பாறலுக்கும் அவர்கள் ஒப்பிட்டுக் கூறியதானே விளங்கும். ஆகவே சிறுமுறையாகவும் பெருமுறையாகவும் பல்வகை யழிவுகளைக் கண்டு, அவற்றை யெல்லையாகவுடைய பல்திறக் காலப்பகுதிகளையே பற்பல காலஅளவுகளாக அவர்கள் கொண்டிருத்தல்வேண்டும். ஆராய்ந்து பார்ப்பின், நாள் முதல் ஊழிவரையுள்ள எல்லாக் கால அளவுகளும் ஒவ்வோர்வகையில் ஒவ்வோரழிவில் முடிவனவேயாகும். இன்பத்தைவிடத் துன்பமே கவனிப்பிற் கிடமாதலால், அது காலத்தை அளப்பதற்கோர் எல்லையாயிற்று.

முதலாவது நாளை யெடுத்துக்கொள்ளின், அஃது உயிர்களின் உணர்ச்சியும் முயற்சியும் அழிந்த இரவில் முடிவதாகும்.

இரண்டாவது வாரம். ஒரு வாரத்தின் கடை நாள் சனி. சனி என்னுங் கோள் துன்பத்திற் கேதுவானதென்றும், சனிக்கிழமை மங்கலவினை செய்யலாகாதென்றும் நம் நாட்டுச் சோதிடமென்னும் வான்நூலும் ஜோசியமென்னும் வான்குறி நூலும் கூறுகிற்கும். ஒரு சனியில் முடியும் ஏழுநாளளவு ஒரு வாரமாகும்.

மூன்றாவது மாதம். மாதந்தோறும் ஓர் அமாவாசை நிகழ்கின்றது. அன்று சந்திரன் மறைந்து உலகெங்கும் இருள் கவிகிறது; கடல் கொந்தளிக்கிறது; நோயாளிகளின் நிலை மிகக் கேடாகிறது. மதி தோன்றாமையாலுள்ள துன்பத்தைப் போக்குவதாக இந்துக்கள் எண்ணெய் முழுக்காடுகின்றனர் சிலர் ஊணுழைப்பும் ஒழிகின்றனர், அல்லது குறைகின்றனர். ஆகவே, அமாவாசை ஒரு துன்ப நாளாக எண்ணப்படுகின்றது. ஓர் அமாவாசைக்கு அடுத்த நாள் தொடங்கி அடுத்த அமாவாசையில் முடிவது ஒரு மாதமாகும்.

நாலாவது ஆண்டு. ஓர் ஆண்டில், மார்கழி மாதம் ஓர் துன்பகாலமாக எண்ணப்படுகின்றது ஆடவர் பஜனை முதலிய பக்தி முயற்சிகளாலும், பெண்டிர் இல்லங்களைத் துப்புரவாகவும் அழகாகவும் வைத்துக்கொள்வதாலும் அம்மாதத்தில் தங்கட்கு நேரவதாகக் கருதும் துன்பங்களைப்போக்க முயல்கின்றனர். அம்மாதத்தின் கடைநாள 'போகிப்பண்டிகை' என்னும் பேரால் ஓர் சுத்திகரிப்பு (துப்புரவாக்கல்) நாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்று சுகாதாரக்கேடான பழம் பொருள்கள் சுட்டெரிக்கப்படுகின்றன. அது துன்பந்தொலைவதற்கோர் அறிகுறியெனவுங் கருதப்படுகின்றது.

மார்கழிக்கடுத்த தை மாதம் மங்கலமாதமாக மதிக்கப் படுகின்றது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பர். தை முதல் துன்ப மாதமாகிய மார்கழியீறான காலப்பகுதி ஓர் ஆண்டாகும்.

ஐந்தாவது அறுபதாண்டுச் சக்கரம். முன் காலத்தில் சில பஞ்சங்கள் அறுபதாண்டிற்கொருமுறையாக அடுத்தடுத்து நிகழ்ந்ததால், அத்தகைய பஞ்சமொன்று அறுபதாண்டிற் கொருமுறை நிகழுமென்றெண்ணி அதற்கு அறுபதாம் ஆண்டுப் பஞ்சமென்று பெயரிட்டனர். இக்காலத்தும் அது (60-ம் ஆண்டாகிய) தாதுவருடப் பஞ்சமென்றழைக்கப்படு கிறது. அறுபதாண்டென்னும் கால அளவு தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கி வந்ததாகும். அவ்வாண்டுகளின் பெயர்களே சாலிவாகனனால் கி. பி. 78-ல் ஏற்படுத்தப்பட் டவை. இதனால் அதிலிருந்து அவன் பெயரால் ஒரு சகாப்தமும் (Era) வழங்கலாயிற்று.

சிலர் சாலிவாகனனுக்கு அறுபது மக்களிருந்தனர் என் றும், அவர்கள் பெயரையே ஆண்டுகளுக்கு இட்டனன் என் றும் கூறுவது நம்பத்தக்கதன்று.

அறுபதாண்டுகளின் பெயர்கள் யாவும் இடுகுறியான வட சொற்கள். அவை வடமொழியாயிருப்பது பற்றி அக்கால அளவு ஆரியரதாகாது. பொருள்வேறு, சொல்வேறு. பல தமிழ் நாட்டு நகரங்கட்கும் தமிழ் மக்களுக்கும் இக்காலத்து வடமொழிப் பெயர்கள் வழங்குதல் காண்க. அறுபதாண் டென்னுமளவு ஒருவர் ஆயுட்காலத்திலேயே முடிந்துவிடுவதி னாலும், அது திரும்பத் திரும்ப நிகழ்வதால் ஓர் ஆண்டின் பெயர் ஆங்கில ஆண்டின் எண்ணைப் போல ஓர் ஆண்டையே குறியாமல் முன்பின் பல ஆண்டுகளைக் குறிப்பதாலும், அதன் பெயரீடு எத்துணையும் சிறந்ததன்று. அதனாலேயே தமிழர் அவ்வாண்டுகட்குப் பெயரிட்டிலர். ஆண்டுகளின் பெயர்களை அறியாமலே ஒருவர் தம் ஆயுளைச் சொல்லக்கூடும்.

மக்களின் சராசரி ஆயுளெல்லை ஆதியில் பன்னூறாகவும், பின்பு, வேத காலத்தில் 100 ஆகவும், சாலோமோன் காலத் தில் 80 ஆகவுமிருந்து இன்று 60 ஆகக் குறைந்துள்ளது. அறுபதாணடானவுடன் 'சஷ்டி பூர்த்தி' என்னும் அறுப தாண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர் பெருமக்கள். அறுபதாண்டிற்கு மேற்பட்ட காலம் சராசரி ஆயுட்கு மிஞ்சின தாக எண்ணப்படுகின்றது. ஆயினும், 60 ஆண்டிற்கு மேற்

பட்டோர் மிகப் பலரிருக்கின்றனர். இக்காலத்திலேயே அறுப தாண்டிற்கு மேற்பட்டோ ரிருக்கும்போது, முற்காலத்தில் அத்தகையோர் கழிபலரிருந்தார் என்பதற் கெட்டுணையுமைய மின்று. ஆதலால், ஆண்டுகளின் பெயர்களில்லாக்காலும் அறுப தாண்டென்னுங் கணக்கு ஒருவர் நினைவிலிருந்திருக்கக்கூடி யதே. ஆகவே, ஒரு பஞ்சத்தில் முடியும் அல்லது முடிவதாக எண்ணப்படும் அறுபதாண்டுக் காலமும் ஓர் அளவாயிற்று.

ஆறுவது, ஊழி. ஊழிகள் கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கென்றும், அவை முறையே 17,28,000, 12,96,000, 8,64,000, 4,32,000 ஆண்டுகளென்றும் புராணமுறை தழுவிப் பஞ்சாங்கங்கள் கூறுகிற்கும். இவ் வூழியளவுகளின் கழிபெரு நீட்சியையும் இவை முறையே ஒவ்வொன்றிலும் 4,32,000 ஆண்டு குறைந்து வருவதையும் நோக்குமிடத்து, இவை கற்பனை யென்றும், இதுவரை உண் மைச் சரித்திரத்தில் ஒருமுறையேனும் கணக்கிடப்பட்டில வென்றும் தெள்ளிதிற் றெரியும். உலகத்தில் எந்த நாட்டிலும் உண்மையான அல்லது நம்பத்தக்க சரித்திரம் கிறிஸ்துவின் காலத்திலிருந்து, அல்லது அதற்குச் சில நூற்றாண்டுகட்கு முன்னிருந்துதான் தொடங்குகிறது. ஆதலால், அதற்கு முற்பட்ட கழிநெடுங்காலக் கணக்கு சரித்திர முறைபற்றிய தன்று.

ஊழி யென்னுஞ் சொற்பொருளை யாராயின், அச்சொல் குறிக்கும் கால அளவு ஏற்பட்டமைக்குக் காரணம் புலனாகும். ஊழி என்னும் சொல் ஊழ் என்னும் பகுதியடியாய்ப் பிறந்து இகர விகுதிகொண்ட தொழிற் பெயராகும். ஊழ் என்னும் பகுதிக்கு முறைமை, விதி என்னும் பெயர்ப்பொருளும், முதிர்வு அழிவு என்னும் வினைப்பொருளுமுள்ளன. இவற்றுள், வினைப்பொருளே பெயர்ப்பொருட்கு மூலமாகும். ஊழ் என் னும் வினைப்பகுதி முதிர்வு அல்லது அழிவு என்னும் பொரு ளில் சங்க நூல்களிற் பலவிடத்து வந்திருப்பதைக் காணலாம்.

(உ-ம்.) "நீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்குமமே" (புறம்: 109)

"உழுதூர் காளை யூழ்கோ டன்ன" (புறம்: 322)

"பழமூழ்த்து" (புறம்: 381)

ஊழ்கோடு = செவ்வியழிந்த கோடு (சாமிநாதையர் உரை)

"கழைவளர் நெல்லி னரியுழை யூழ்த்து"

(பத்துப்பாட்டு: மலைபடுகடாம்-180)

"ஊழுற் றலமரு முந்தூழ்" (பத்து : மலை. 133)
ஊழுறுத்து=வீழ்த்தி (பெருங்கதை உரை: பக்கம் 264)

"காந்தளூழ்த்துச் சொரிவபோல்"
(சீவகசிந்தாமணி: 1742)

ஊழ் என்னும் பகுதியடியாய்ப் பிறந்து அல் விகுதி பெற்ற ஊழல் என்னும் தொழிற்பெயர் கேடு என்னும் பொருள் தருவதாகும். சூரியனைக் குறிக்கும் என்று என்னும் பெயர் ஊழ் என்னும் சொல்லொடு புணர்ந்தான என்றூழ் என்னுந் தொடர், அழிவுக்குரிய கோடைகாலத்தையும், வெயிலையும் அவற்றை யுண்டாக்கும் சூரியனையுங் குறிக்கும்.

மேற்காட்டிய உதாரணங்களினின்று, ஊழ் என்னும் சொல் முதலாவது அழி என்னும் பொருள் தரும் வினைப் பகுதியே யென்பதும், பின்பு முதனிலைத் தொழிற்பெயராயும் இகர விகுதிபெற்ற தொழிற் பெயராயும் நின்று, அதன் பின்பு ஆகு பெயராகி விதி, முறைமை, யுகம் என்னும் பொருள்களைத் தந்தது என்பதும் அறியக் கிடக்கின்றன. ஆக்கமுங் கேடு மாகிய இரண்டும் விதியே யேனும், கேடு அல்லது துன்பம் வந்தவிடத்தே விதியென்று இறைவனை யெண்ணுவதும், ஆக்கம் அல்லது இன்பமுள்ளவிடத்து இறைவனை மறந்து மகிழ்ந் திருப்பதும் உலகவியல்பாதலால், அழிவு என்று பொருள்படும் ஊழ், ஊழி என்னுஞ் சொற்கள் மேற்கூறிய விதி முதலிய பொருள்களை முறையே கொள்ளலாயின.

ஒவ்வோர் ஊழியின் இறுதியிலும் ஒவ்வொரு பேரழிவும் ஒவ்வொரு சதுரூழியின் இறுதியிலும் ஒவ்வொரு மாபேரழிவும் நிகழ்வதாகச் சித்தாந்த நூல்கள் கூறும். இவ்வழிவு எரிமலை யெழுச்சியாகவாவது கடல்கோளாகவாவது இருக்கலாம். இவ்விரண்டிற்குங் காரணம் நிலத்தின் உள்நடுவிலிருக்கும் வெங் கொடு நெருப்பேயாகும். சிவனுக்கிருப்பு மலையும் திருமாலுக் கிருப்பு (பாற்) கடலுமாதலால், சைவர்கள் எரிமலை வடிவாக வும், வைணவர்கள் (மாலடியார்கள்) கடல்கோள் வடிவாகவும் ஊழியிறுதி யுலகை வழிவைக் கூறுவர். உலகமென்பது உலக முழுவதையுமேனும் அதில் ஒரு பாகத்தையேனுங் குறிக்கும். இந்துமாபெருங்கடலிருக்குமிடத்து முன்னொருகாலிருந்து இது போது நீர்க்கீழ் மூழ்கியுள்ள பண்டைத் தமிழ்நாட்டில், மூன்றுபேரழிவுகள் நிகழ்ந்ததாகச் சங்கநூல்களா லறியக் கிடக்கின்றது. அம்மூன்றுங் கடல்கோள்களே. அவை முறையே தலைச்சங்கத்திறுதியிலும், இடைச்சங்கத்திறுதியிலும் கடைச்சங்கத்திறுதியிலும் நிகழ்ந்தவை.

அடுத்தடுத்து நெட்டிடையிட்டு மூன்று கடல்கோள்கள் நிகழவே, இவ்வகையழிவு ஒவ்வோர் நெடுங்காலத்தின்பின் நிகழுமென்றெண்ணி அதற்கு ஊழியெனப் பெயரிட்டனர். (ஊழி+அழிவு. உலக ஊழியை அல்லது அழிவை எல்லையாகவுடைய காலத்தை ஊழியென்றது ஆகுபெயர்.) மூன்றாம் அழிவிற்குப் பிறகு இதுபோது நடக்குங் காலப்பகுதியை நாலாம் ஊழியென்றனர். தொல்காப்பியரின் காலத்தைக் குறிக்குமிடத்து "இவ்வாசிரியர் ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின்" என்று (தொல்காப்பியம்: பொருளதிகாரம்; கற்பியல் 4-ம் சூத்திரவுரை) நச்சினார்க்கினியர் கூறியிருப்பதை உய்த்துணர்க.

இதுவே ஊழி, சதுரூழி என்னும் கால அளவுகள் தோன்றிய வரலாறாகும். இவற்றுக்குப் பிற்காலத்தார் வடமொழிப் பெயருங் கற்பனையளவுங் கூறியதன்றிச் சதுரூழியைத் திரும்பத்திரும்ப நிகழுங் காலச்சக்கரமாகவுங் கூறிவிட்டனர்.

இப்போது நடக்கும் கலியூழி தோன்றி 5039 ஆண்டுகளாகின்றன என்று கூறப்படுகின்றது. சங்கநூல்கள் கூறும் 3-ஆம் அழிவிற்குப்பின் 1800 ஆண்டுகளே கழிந்துள்ளன. 5039 ஆண்டு என்னும் கணக்கு உண்மையாயின், அஃது 2-ம் கடற்கோளிலிருந்து தொடங்கியதாகக் கொள்ளல்வேண்டும். முதல் கடல்கோட்கு முன்னும் சில கடல்கோள்கள் நிகழ்ந்திருக்கலாம். இங்ஙனம் சரித்திரத்திற்கெட்டாத பல தொன்முது கடல்கோள்கள் பண்டைத் தமிழ்நாட்டில் நிகழ்ந்தமை ஸ்காட் எலியட் என்பவர் எழுதிய 'மறைந்த லெமூரியா' (Lost Lemuria) என்னும் நூலாலறியப்படும். ஆதலால், எவ்விதத்தும் ஊழிக்கணக்கு மேற்கூறிய முறையைத் தழுவியதேயென்பதற்கு யாதும் இழுக்கின்று. ஆகவே, நாள் முதல் ஊழியீறான எல்லாக் கால அளவும் ஒவ்வோர் அழிவை எல்லையாகவுடையவென்றும், எல்லாக் கால அளவுகட்கும் ஆதாரமான நாளானது ஓர் அழிவில் முடிவதால், அதற்கு மேற்பட்ட எல்லாப் பேரளவுகளையும் அங்ஙனமே ஒவ்வோர் அழிவில் முடிவனவாக அமைத்துக்கொண்டனர் என்றும் அறிந்துகொள்க.

மொஹென்-ஜோ-தாரோ

[காழி. சிவ. கண்ணுசாமி பி. ஏ.]

சிந்துமண்டிலத்தைச் சேர்ந்தது லர்காணக் கோட்டம். அதிலுள்ள டொக்ரி என்னும் ஊரிலிருந்து எட்டுக் கற்களுக்கு அப்பாலுள்ளது மொஹென்-ஜோ-தாரோ. இதன்கண் 5000 ஆண்டுகட்கு முன்பிருந்ததாகக் கருதப்படும் ஒரு பண்டைப் பெருநகரம் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது. காலஞ்சென்ற திரு. ஆர்.டி. பானர்ஜி என்பவரே 1922-ஆம் ஆண்டில் இந்நகரத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்தவர். அதற்குப் பிறகு அரசாங்க புதைபொருளாராய்ச்சித் துறையாரால் வெட்டு வேலைகள் பெருஞ்செலவில் தொடங்கப்பட்டன. இந்நகரத்தைக்குறித்து தி இண்டியன் உவர்ல்டு என்னும் தாளில் கராச்சி விக்டோரியாப் பொருட்காட்சிச் சாலைக் காப்பாளர் ஆகிய திரு. சி. ஆர். ராய் என்பார் எழுதிய கட்டுரை ஈண்டு மொழி பெயர்த்துத் தரப்படுகிறது:—

பழமை பொதுளும் இக்குவியல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதனபோலத் தோற்றலாம். ஆயினும் மொஹென்-ஜோ-தாரோவில் வாழ்ந்த பண்டைப் பெருமக்களின் கலைமுறை யுயர்வையும் நாகரிக முதிர்ச்சியையும் உள்ளவாறே காணவேண்டின் இவற்றைச் செவ்வனே ஆராய்ந்து தொடர்புபடுத்தித் திருத்தியமைத்தல் வேண்டும்.

இப்பாழ்ங் குவியல்களை ஆராய்ந்தறியும் வசதி கிடைத்தவர்களுள் நானும் ஒருவனாகையால் நான் ஆராய்ந்து கண்ட முடிபுகளிற் சிலவற்றை ஈண்டு எழுதுகிறேன் :

4000 ஆண்டுகட்குமுன், அஃதாவது இரும்புக்காலத் தொடக்கத்தில் ஆரியர்கள் இந்தியாவினுட் புகுந்தார்கள் என்றும், கருநிறம் படைத்துச் சப்பைமூக்கு வாய்ந்திருந்த காட்டுமிராண்டிகளான பண்டைய இந்திய மாக்களை வென்று இந்தியாவிலேயே அவர்கள் தங்கிவிட்டார்கள் என்றும் வரலாற்றாசிரியர்கள் இதுகாறும் கருதிவந்தார்கள் ; மேலும் நாகரிகம் என்பதே ஆரியர் வருகைக்குமுன் இந்தியாவில் இருந்திருக்க முடியாதென்றும் முடிபு கட்டியிருந்தார்கள். இம்முடிபுகளெல்லாம் இனிப் புறக்கணித்து ஒதுக்கப்படவேண்டியனவேயாம்.

ஆரியர் வருகைக்குமுன் சிந்து மண்டிலத்தில் மிகச் சிறந்ததொரு நாகரிகம் பரவி இருந்த தென்பதும், அஃது ஆரியர்தம் நாகரிகத்தை விடவும், அன்றி அக்காலத்தே சிறப்படைந்திருந்த ஏனைய

ஏலம், மெஸொபொட்டேமியா, பாபிலோன், எகிப்து ஆகிய நாடுகளின் நாகரிகங்களைவிடவும் எவ்வாற்ருனும் சிறந்த தொன்றென்பதும் மொஹன்-ஜோ-தாரோ வெட்டுதல்களினுல் வெளியாகின்றன.

மொஹென்-ஜோ-தாரோ நாகரிகம் இரும்புக் காலத்திற்கும் மிக முற்பட்டது. அது புதுக்கற் காலத்திற்கும், செம்புக்காலத்திற்கும் இடைப்பட்டதொரு காலத்தைச் சேர்ந்ததென்பது ஆங்காங்குக் கற்கருவிகளும் செப்புக் கருவிகளும் விரவி அந்நகரிடைக் காணப்படுவதால் ஊகிக்கப்படும்.

அந்நகரப் பெருமக்கள் தேர்ந்த பொறிவலாளர்களின் (Engineers) உதவியைக்கொண்டு சிறந்த திட்டங்கள் போட்டு அத்திட்டங்களின்படியே சிந்துநதியின் மேற்குக் கரையோரமாக அந்நகரத்தைச் சமைத்துள்ளனர்.

ஆங்குக் காணப்படும் வியக்கத்தக்க கழிநீர்க் கால்வாய்முறையின் செம்மையும், சுகாதார நுட்ப அமைப்பும் இக்கால நனிநாகரிகரும் பின்பற்றக் கூடியனவாம்.

திருந்திய அப்பெருநகரம் அரசாங்கத்தார் ஆட்சியிலோ நகராண்மைக் கழகத்தாரின் மேற்பார்வையிலோ அமைந்திருத்தல் வேண்டும். அந்நகர மக்கள் ஒருவருக்கொருவர் மிகுந்த நேசத்துடன் பழகி வந்துள்ளனர். அவர்கள் பல துறைப்பட்ட தொழில்களைக் கையாண்டு கலை முறையை வளர்த்து வந்தனர். வணிகர், உழவர், கன்னர், கருமார், தட்டார், கற்றச்சர், குயவர், நெசவுகாரர், கூலவணிகர், தச்சர், சிற்பிகள், கொற்றர், தந்த வேலையாளர், சங்கறுப்போர், வலைஞர், வேடர், பூசாரிகள், பள்ளி யாசிரியர், போர்வீரர், எண்ணெய் வணிகர், நாவிதர், தோட்டிகள் முதலியோர் அந்நகரத் தொழிலாளர்களிற் சிலராவர். நாட்டியமும் இன்னிசையும் பொதுமகளிரால் வளர்க்கப்பட்டு வந்தன. நடனமாடும் நிலையிலுள்ள பொதுமகளொருத்தியைப் போன்று வெண்கலத்தாற் செய்யப்பட்ட ஒரு சிலையுருவம் ஆங்குக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் இஃது ஊகிக்கப்படும்.

உயர்ந்த கூரையும், வாயிற்படிகளும் சாளரங்களும் நிறைந்த பல அறைகளுமுடையதாய்ச் சமைக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டில் தனித்தனியாக ஒவ்வொரு குடும்பத்தாரும் வசித்து வந்தனர்.

ஒவ்வொரு வீட்டிற்கும் தெருப்புறத்தில் ஒரு வாயிற்படி உண்டு. வாயில் காவலன் தங்கியிருப்பதற்கென அவ்வாயிற்படியை அடுத்துத் திறந்த சிற்றறை யொன்று கட்டப்பட்டிருக்கும், அதன் பிற்புறம் உட்கார்ந்து பேசுவதற்கமைந்த கூடங்கள் இருக்கும்; அவற்றின் பிற்புறம் படுக்கையறைகள் சமையலறைகள் முதலியவற்ரேடு கூடிய மகளிர் உறைவிடம் இருக்கும். குடிப்பதற்கும், மற்ற வீட்டுக்காரியங்களுக்கும் உதவும் நன்னீர்க் கிணறு ஒன்று ஒவ்வொரு வீட்டிலுமுண்டு. இரண்டடுக்குள்ள வீடுகளும் அங்குக் கட்டப்பட்டிருந்தன,

மேன் மாடிக்குச் செல்லும் படிக்கட்டுகள் சில இன்றும் காணப்படு கின்றன. இற்றை நாளிற் காணப்படும் படிக்கட்டுகளைப் போலவே அவை யுள்ளன.

அரண்மனையென்று ஊகிக்கப்படும் மிகப் பெரிய வீடொன் றும் தோண்டி யெடுக்கப்பட்டுள்ளது.

உள் வழிகளோடுகூடிய பல அறைகள் அரண்மனையைச் சூழ்ந்திருந் தன. அவற்றின் நடுவேஉயர்ந்த நெடுந்தூண்களோடு கூடிய மண்டபம் ஒன்று அமைந்திருந்தது. அதனருகே ஒரு பெரிய செய்குளம். அச் செய்குளத்தைச் சுற்றிலும் அறைகளும் தாழ்வாரங்களும் கட்டப்பட் டிருந்தன. மண்டபத்திலிருந்தும் அதன் எதிர்ப்புறத்திலிருந்தும் இரண்டு படிக்கட்டுகள் அச்செய்குளத்திற்குட் சென்றன. குளத்தில் நிறைந்திருக்கும் நீர் தூய்மை கெட்டவிடத்து வெளியே அதனை வடித்து விடுவதற்கெனப் பெரியதொரு வடிகாலும் கட்டப்பட்டிருந் தது. உரோமதேயத்துப் பெருமாட்டிகளைப்போலவே அவ்வரண் மனைப் பெருமாட்டிகளும் இச்சிங்காரச் செய்குளத்திற் புனல் விளை யாட்டு விளையாடி வந்தார்கள்போலும்!

இவை யெல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் வியக்கத்தக்கதாய்க் காணப்பட்டதோர் அமைப்பு மலசலங் கழிக்கும் ஒதுக்கிடங்களாக அமைக்கப்பட்ட விடுதிகளேயாம். அவற்றின் புறச்சுவர்களும் தளவரி சைகளும் கால்வாய்களும் இன்றும் செம்மையான நிலையிலேயே காணப்படுகின்றன.

அந்நகர ஆண்மக்கள் இடுப்பில் ஆடையும், உடலிற் சட்டையும் உட்சட்டையும், தலையில் முண்டாசும்; காலிற் செருப்பும் அணிந்திருந் தனர், மகளிர் பூவேலைகள் நிறைந்த புடவைகளும், பாவாடைச் சட்டைகளும், இரவிக்கைகளும் அணிந்திருந்தனர்.

அந்நகர மகளிர் அணி அலங்காரமுறையிற் சிறந்து விளங் கினார்கள் என்பதில் ஐயமில்லை. இது அவர்களுடைய நகை களாலும், அலங்காரக் கருவிகளாலும் நன்கு தெளியப்படும்.

பொன், வெள்ளி, செம்பு, தந்தம், சங்கு, ஒளிக்கற்கள் முதலிய வற்றால் இயன்ற மாலைகள், முடிகள், தோடுகள், தொங்கட்டான்கள், மூக்குத்திகள், மோதிரங்கள், வளையல்கள்முதலியன அவர்கள் நகை களாம். மணிக்கட்டு முதல் முழங்கை வரையில் அவர்கள் வளையல்கள் அணிந்திருந்தனர். இவ்வழக்கம் சிந்திப் பெண்களிடம் இன்றுங் காணப்படுகின்றது. வெண்கலச் சலங்கைகளும் முத்துக்களும் கோத் துச் செந்நீல நிறமுடையதாய் அவர்கள் அணிந்திருந்த அரைக்கச்சுகள் கண்களைப் பறிக்கத்தக்க நேர்த்திவாய்ந்திருந்தன. அவர்கள் மூக் குத்திகள் அணிந்திருந்தார்கள். அம்மூக்குத்திகள் காதிலுள்ள தோடு களோடு பொற்சங்கிலியால் இருபுறமும் பிணைக்கப்பட்டிருந்தன. இவ்வகை மூக்குத்திகளைச் சிந்திப் பெண்களும் வங்காளப் பெண்

களும் இன்றும் அணியக் கண்டிருக்கலாம். அக்கால மகளிர் தங்கள் மயிரைப் பின்னலிட்டு விதம் விதமாக மேலே தூக்கி முடிந்து அவற்றில் பொன்னாலும் வெள்ளியாலும் இயன்ற கொண்டை யூசிகளைச் செருகி யிருந்தனர். கண்களில் அவர்கள் மைதீட்டிக் கொள்வர். முகம் பார்க்க அவர்கள் பயன்படுத்திய கண்ணாடிகள் செம்பினாலியன்றவை; தலைவாரிக்கொண்ட சீப்புகள் தந்தத்திலும் மரத்திலும் செய்யப்பட்டவை. வங்காளத்தில் இத்தகைய கண்ணாடிகள் இன்றும் மணவினைக் காலங்களில் வழங்கி வருகின்றன. இருபுறமும் பல்லமைந்த சீப்புகளும் இன்றும் வங்காளத்திலும் சிந்திலும் காணப்படுகின்றன.

இற்றைநாட் குழந்தைகளைப்போலவே 5000 ஆண்டுகட்கு முன்னிருந்த குழந்தைகளும் விளையாட்டு விருப்புடையவர்களாய் இருந்தார்கள்

பொம்மைகளையும் விளையாட்டுச் சாமான்களையும் இப்பொழுது நாம் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதுபோலவே அக்காலப் பெற்றோர்களும் வாங்கி யளித்து மகிழ்ந்துவந்தனர். விலங்குகள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றைப் போன்றும் ஆண்மக்களையும் பெண் மக்களையும் போன்றும் சுடுமண்ணாற் செய்யப்பட்ட பொம்மைகளைக் கணக்கு வழக்கற்றனவாய் நாம் காண்கின்றோம்; சிறுமிகளுக்கெனச் செய்யப்பட்ட மண் செப்புகளும் பல காண்கின்றோம். கயிறு கொண்டிழுத்தால் தலையைமட்டும் அசைப்பனவும், ஓடுவனவுமாகிய மாடுகள் போன்ற பொம்மைகளையும் பறவைவண்டிகளையும் நாம் காண்கின்றோம். மண்ணாலாகிய கிலுகிலுப்பைகள் கண்ணைக் கவரும் நிறந்தீட்டப்பட்டனவாய்ப் பல காணப்படுகின்றன. வங்காளக் கிராமங்களில் இத்தகைய கிலுகிலுப்பைகள் பல இன்றும் செய்யப்பட்டு வருகின்றன. மொஹெஞ்சொ-ஜோ-தாரோவில் காணப்படும் ஊதுகுழல் இந்த 5000 ஆண்டுகளாக ஒருசிறிதும் மாறுதலின்றி வந்துள்ளது வியப்பினும் வியப்பே. வாற்புறம் துளையமைந்து கோழியையோ குருவியையோ போன்றுள்ளது அவ் ஊதுகுழல். 5000 ஆண்டுகட்குப் பிறகு, அதனை நான் எடுத்து ஊதியதும் அது நன்றாகவே ஊதிற்று.

மதிப்புரை

குழந்தையின்பம் :—அன்பு நிலயத்தார் வெளியிட்ட 23-வது அன்புமலர். சுவாமி சுத்தானந்த பாரதியார் பாடிய 20 எளிய தமிழ்ப் பாடல்கள் கொண்டது. குழந்தைகளை அன்புடன் வளர்த்து அவர்களால் எய்தும் இன்பத்தை நுகரும் சிறந்த கருத்துடன் எழுதப்பட்டுள்ளன எளிய இனிய இப்பாடல்கள். நூல் மிகவும் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. விலை. அணா 3.

முல்லைப்பாட்டு.—மூலம், உள்ளுறை, சொற்குறிப்பகராதி, பொருட்குறிப்பகராதி, உரைக்குறிப்பகராதி, இலக்கணக்குறிப்பகராதி, கலைக்குறிப்பகராதி ஆகியவற்றோடு இளவழகனார் பதித்து வெளியிட்டது. விலை அணா 8.

தமிழ் நூல் விளக்கு (முதற் பாகம்) :—திரு. P. R. மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., பி. எல். எழுதியது. 175 பக்கங்கள்கொண்ட சிறந்த தமிழாராய்ச்சி நூல். தமிழர்தம் ஒற்றுமை நயப்பாட்டை நோக்கத்தில் வைத்துத் தமிழ்நூலிற் சிறந்த திருக்குறள் சிலப்பதிகாரம் போன்ற உயர்ந்த நூல்களின் உட்கருத்தைத் தெள்ளத் தெளிய விளக்கிச்சொல்வது. இதன் விலை ரூ. 2.

சக்தி :—உயரிய தமிழ்மாத வெளியீடு. கண்ணைக்கவரும் வனப்புடையதாய் அச்சிடப்பட்டுள்ளது. தமிழ்ப்பேரறிஞர்கள் பலர் கட்டுரைகளுடன் விளங்குவது. தேசியமணங் கமழ்வது; சித்திரப் படத்துடன் திகழ்வது. 48-பக்கங்கள்கொண்ட அழகிய திங்கட்டாள். ஆண்டுக்கட்டணம் ரூ. 3-8-0. பதிப்பு நிலயம் மானேஜர், "சக்தி" 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

குறிப்பு:—மதிப்புரையிற்கண்ட நூல்கள் கழகத்தில் கிடைக்கும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை
28-ம் ஆண்டு விழா

இச்சங்கவிழா, 19, 20-8-39 சனி ஞாயிறுகளில் மிக்க சிறப்பாகத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப்பெருமன்றத்தில் நடைபெற்றது. சங்க விழாத்தலைவர் யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக் கல்லூரித் தலைவர் பெருமை மிக்க திரு. அ. நடேசப்பிள்ளை அவர்கள், B.A. B.L., M.L.C., சங்கத்தாரால் மிக்க சிறப்புடன் வரவேற்கப்பட்டார்.

இரண்டு நாட்களிலும் மாலை 3-மணி முதல் 9-வரையில் தொடர்ந்து விழா நடைபெற்றது. சொற்பொழிவாளர்களாக சென்னை வித்துவான் திரு மா. இராசமாணிக்கம் B. O. L. அவர்கள், போளூர் வித்துவான் திரு. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள், திருவையாறு "கரந்தைக்கவியரசு" R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், அண்ணாமலைநகர்ப் பேராசிரியர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், திரு. ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை M. A. அவர்கள், பிரபுத்தபாரதா ஆசிரியர், பேராசிரியர் பண்டித விபுலானந்த அடிகளார் B Sc. (London) முதலியவர்கள் சொல்லினும் பொருளினும் இனிமை மிக்க பெருஞ் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். சங்கமாணவர்களால் முதல்நாள் முடிவில் "கண்டீரக்கோப் பெருநள்ளி" என்ற தமிழ் நாடகம் நன்கு நடிக்கப்பெற்றது. விழாவினில் தஞ்சை, திருச்சி, மதுரை, சென்னை, தென்னார்க்காடு, வடார்க்காடு, இராமநாதபுரம், கோயமுத்தூர், இலங்கை முதலிய பலநாட்டுத் தமிழ்ப் பேரறிஞர்களும் ஆயிரக்கணக்கில் கூடியிருந்தனர். விழாவில் ஒலிபெருக்கிக் கருவியமைக்கப்பெற்றிருந்தது. சங்கத்தலைவர் தமிழவேள் செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகிப், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் நன்றிகூறலுடன் விழா இனிது முடிவுற்றது.



சாத்தூர் வழக்கறிஞரும் தமிழ்ப்புலவரும் ஆகிய

T. S. கந்தசாமி முதலியார், பி. ஏ.